# இறைதூதன்

## Messenger of God

***MY WORK IS MY BLESSINGS*** - BABA -


### இம்மாதச் செய்தி

சமுதாயத்தில் நீ செய்ய வேண்டிய
கடமைகளை உணராவிட்டால்
உனது வாழ்க்கை வீண்.
ஒற்றுமை என்ற தத்துவத்தின் மேல்
நம்பிக்கை வை.
எங்கே ஒற்றுமை இருக்கிறதோ
அங்கே தூய்மை இருக்கிறது.
எங்கே தூய்மை இருக்கிறதோ
அங்கே தெய்வீகம் இருக்கிறது.
தெய்வீகம் இருக்கும் இடத்தில்
ஆனந்தம் இருக்கிறது. எனவே
அனைவரையும் நேசித்து
அனைவருக்கும் சேவை செய் என்று
யேசுநாதர் கூறினார்.


செய்திக் கட்டுரை
(3ஆம் பக்கம்)



**சர்வமதப் பத்திரிகை**
முரசு 55
மார்கழி 2002

**மாதம் ஒரு முரசு**
விலை ரூபா 10/-



நிலையம் Sathya Sai Centre
வாராந்த பஜனை
வியாழன் மாலை 4.00

# பிரசாந்தி ஆச்சிரமத்தில் வாழும் பேறுபெற்ற பக்தர்கள் பற்றி பகவானே கூறுகிறார்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

**அன்னமாசார்யா:**

அன்னமாசார்யா மிகவும் சிறந்த முனிவர், பாடல் பல புனைந்தவர். அவர் கூறுகிறார்.

(எதையெல்லாம் ஒருவன் நினைக்கிறானோ, அவன் நினைக்கும் நேரத்துக்குத் தகுந்தபடி, அந்த அளவு கருணையை இறைவன் பொழிகிறார்) நீ மனதில் என்ன நினைக்கிறாயோ அதை இறைவன் பார்க்கிறார். ஆகவே அதற்கேற்ப விளைவுகள் தான் உனக்கு ஏற்படுகிறது. உனது நடத்தையும் உனது எண்ணங்களுக் கேற்றபடி அமைய வேண்டும்.

பிரசாந்தி நிலையத்தில் சேவை செய்தபடி இயற்கை எய்திய பக்தர்களின் நடத்தையும் ஒழுக்கத்தையும் பற்றி உற்று நோக்கினால் அவை மிகவும் ஆச்சரியமானதாகவும், ஆர்வத்தைத் தூண்டுபவை யாகவும் இருக்கும். 80 வயதுக்கு மேற்பட்ட எத்தனையோ பக்தர்கள் ஸ்வாமிக்கு சேவை செய்து வந்தனர். அதில் பலர் ஸ்வாமியுடன் பத்ரிநாத், யாத்தி ரைக்கு வந்தவர்கள் கஸ்தூரியும் சூராய் யாவும் கூட வந்தனர்.

**பத்ரிநாத்**

இந்த பத்ரிநாத் யாத்திரை மிகவும் அதிசயங்கள் நிரம்பியது. உயர்ந்த இமயமலைப் பகுதியைக் கடந்து செல்லும்போது ஒரு மாபெரும் நிலச்சரிவை ஸ்வாமி முன்கூட்டியே உணர்ந்தார். ஸ்சுவா மியும், கவர்னர் ராமகிருஷ்ணராவும் ஒரு சிறிய குன்றின் மேல் நின்றபடி அங்கு வந்த வண்டிகளையெல்லாம் வெகு சீக்கிரம் அவ்விடத்தை விட்டுச் செல்லும்படி செய்தனர். நிறைய பஸ்கள், 16 லாரிகள், 120 கார்கள் வரை நல்லபடியாகக் கடந்து சென்றன. அதற்கப்புறம் தான் அந்த பயங்கரமான நிலச்சரிவு ஏற்பட்டது.

அந்தத் தடையை முழுதுமாக விலக்க மூன்று வருடங்களுக்கு மேல் ஆயிற்று. அது வரை யாத்ரீகர்கள் அந்த இடத்தை நடந்து தான் கடக்க வேண்டி வந்தது. சில வயதானவர்கள் 'டோலி' மூலம் கடந்தனர்.

**வெற்றுக் கால்களுடன்:**

நாங்கள் பத்ரிநாத் அடைய 29மைல் நடக்க வேண்டி வந்தது. ஸ்வாமி தான் அணிந்திருந்த கான்வாஸ் காலணியைக் கழற்றி ராமகிருஷ்ணராவுக்குக் கொடுத்தார். இராமகிருஷ்ணரால் கதறினார். 'ஸ்வாமி! தாங்கள் வெறும் காலுடன் நடக்கிறீர்கள்?' நான் சொன்னேன்.

''எதைப்பற்றியும் கவலைப்படாதீர்கள், எல்லோரும் பின் தொடர்ந்து வாருங்கள்'' 680 பேர் எங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர். நாங்கள் நிறைய பனிப்பாறைகளைக் கடக்க வேண்டி வந்தது. ராமகிருஷ்ரால் என்னை 'ஷு' போட்டுக்கொள்ளச் சொல்லி வற்புறுத்தினார். மற்றவர்களும் 'ஷு' போட்டுக்கொள்ளலாம் என்ற காரணத்திற்காக. ஆனால் ஸ்வாமி மட்டும் வெறும் காலுடன் நடந்து சென்றேன்.

காலில் கொப்பளங்கள் தோன்றின 11மைல்கள் பனிக்கட்டி மேலேயே நடக்க வேண்டி வந்தது ராமகிருஷ்ணரால் மிக வும் கவலைப் பட்டார். ஏன் ஸ்வா மியை அழைத்து வந்தோம். ஸ்வாமி இப்படி சகிக்க முடியாத துன்பங்களையெல்லாம் படவேண்டியிருக்கிறதே என்று வருந்தினார். நான் அவரை வருந்த வேண்டாம் எனத் தேற்றினேன். நீண்ட நேரம் நடந்தபின் நாங்கள் அடைய வேண்டிய இடத்தை அடைந்தோம்.

**குதிரை:**

அவர்கள் கவர்னரின் உபயோத்திற்காக ராஜா என்ற ஒரு நல்ல குதிரையைக் கொண்டு வந்தார்கள். அவர்களெல்லாம் வேண்டிக் கொண்டதால் ஸ்வாமி குதிரை மீது ஏறியமர்ந்து புகைப்படம் எடுக்க 'போஸ்' கொடுத்தேன். நாங்கள் கோயிலை அடைந்த போது, சிறிய சன்னதியாக இருந்ததைக் கண்டோம் ஒரே சமயத்தில் 6 அல்லது 7 பேர்கள் தான் இருக்க முடியும். ஸ்வாமி தன்னுடன் வந்திருந்த அனைத்து பக்தர்களையும் கோயிலின்முன் 'ஹாலில்' அமரச் சொன்னேன்.

அந்தக் கோயிலில் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்திருந்த லிங்கத்தைப் போன்று ஒரு ஆத்மலிங்கத்தை ஸ்வாமி 'உருவாக்கினேன். ராமகிருஷ்ணரால், தான் உத்திரப்பிரதேச கவர்னர், அது பத்ரி நாத்தையும் உள்ளடக்கியது என்பதையும் மறந்து 'ஸாயிராம், ஸாயிராம்' என்று ஆனந்தத்தால் கத்தியபடி குதித்தார். அவர் நன்கு படித்தவர். பதினாறு மொழிகள் தெரியும். ஸ்வாமியின் பரம பக்தர், அவர் உத்திரப் பிரதேச கவர்னராக 10 ஆண்டுகள் இருந்தார். இது அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் கிடைத்த தங்கமான நேரம்.

**கன்னியாகுமரி:**

ராமகிருஷ்ணரால். கேரள கவர்னராக இருந்த போது என்னைக் கன்னியாகுமரி அழைத்துச் சென்றார். அன்று கடல் மிகவும் கொந்தளிப்பாகவும், முரட்டுத்தனமாகவும் இருந்தது. என்னுடன் வந்திருந்த அரசாங்க அதிகாரி களையும், பக்தர்களையும் ஒரு பாதுகாப்பான தூரத்தில் உட்கார்ந்து கடலைப்பார்க்கச் சொன்னேன்.

ஸ்வாமி மட்டும் முன்னே சென்றேன். ஆனால் ராமகிருஷ்ணரால் தானும் ஸ்வாமியுடன் இருக்க வேண்டும் என வற்புறுத்தினார். எவ்வளவு தான் அபாயமாக இருந்தாலும் சரி, அது உயிருக்கே உலைவைக்குமென்றாலும், அவர் ஸ்வாமி கூடவே இருக்க விரும்பினார். அதன் பிறகு ஈஸ்வரம்மா, ஸ்வாமியின் தாயாரும் வந்து ஸ்வாமியின் பக்கத்தில் நின்று கொண்டார். ராமகிருஷ்ணராவும் வந்து பக்கத்தில் நின்றார்.

ஒரு பெரிய அலை வந்தது, அது ஸ்சுவாமியின் பாதத்தில் ஒரு பெரிய முத்து மாலையை சமர்ப்பித்தது. ஸ்வாமி அதை எடுத்து ராமகிருஷ்ணராவிடம் கொடுத்தார். பிறகு அது மியூஸியத்தில் வைக்கப்பட்டது. இதையெல்லாம உடனிருந்து அனுபவிக்க ராமகிருஷ்ணராவுக்கு அதிர்ஷ்டம் இருந்தது.

மூன்று படைத்தளபதிகளும், ஜெனரல் திம்மய்யா, ஜெனரல் மல்லிக் போன்றவர்கள் கேரளாவுக்கு கவர்னரின் விருந்தாளிகளாக வந்த னர். அவர்களுக்கெல்லாம் ஸ்வாமியின் ஆசீர்வாதம் கிடைத்தது.

**கடைசி நாட்கள்:**

இராமகிருஷ்ணராவின் கடைசி நாட்களில் ஸ்வாமியை ஹைரதரபாத் வரவேண்டும என மனதார நினைத்தார். தான் இறப்பதற்கு முன் ஸ்வாமியை தரிசிக்க அவர் மிகவும் விரும்பினார். ஸ்வாமி 900 மைல் காரை ஓட்டிக் கொண்டு அதிகாலையில் ஹைதரப்பாத் சென்றார்.

அந்த நேரத்தில் ராமகிருஷ்ணரால் தன் மனைவியிடம் ஸ்வாமி தனது இல்லத்துக்கு வருவது போல் கனவு கண்டதாகச் சொன்னார் அதற்கு அவர் மனைவி கூறினார். அது கனவில்லை. ஸ்சுவாமி நிஜமாகவே வந்திருக் கிறார். என்றார்.

பிறகு, படுத்த படுக்கையாக இருந்த ராமகிருஷ்ணராவின் அறைக்கு ஸ்வாமி சென்றார். அங்கே ஸ்வாமியின் பாதங்களைத் தொட்டு ஆசிபெற்ற பின்பே ராமகிருஷ்ணராவின் உயிர் பிரிந்தது.

ஒரு உண்மையான பக்தன். மிக உயர்ந்த பதவிகள் வகித்தும் ஒரு சிறிதும் அகங்காரமற்ற நல்ல மனிதனின் உலக வாழ்க்கை இவ்வாறு நிறைவு பெற்றது.

தொகுப்பு:-

**த. சுகன்யா**

சனாதன சாரதி ஜுலை 2001

# அனைவரையும் நேசித்து அனைவருக்கும் சேவை செய்

**– பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா –**

அன்பின் வடிவங்களே!

மக்கள் வெறுப்பையும், கேடு விளைவிக்கும் தீய எண்ணங்களையும் தங்கள் மனதை விட்டு வெளியேற்றி அன்பை வளர்த்துக்கொண்டு அனைவரும் ஒன்றே என்ற ஒற்றுமை உணர்வை உருவாக்கும் போதுதான் இந்த பூமி சுவர்க்கமாக மாறுகிறது.

அலைகளின்றி சமுத்திரம் இருக்க முடியாது. ஒளிக்கற்றைகளின்றி சூரியன் இருக்க முடியாது. அதுபோல அன்பின்றி இருப்பவனை மனிதன் என அழைக்க முடியாது. மனிதன் தன் வாழ்க்கையையும் அன்பினால் நிறைத்துக் கொள்ள வேண்டும். அவன் யாரையும் வெறுக்கக்கூடாது. அவர்களுக்குத் தீங்கும் செய்யக் கூடாது. அவன் தன் இருதயத்தை இரக்கத்தால் நிரப்பிக்கொள்ள வேண்டும்.

சுயநலமும், சுயலாபமும் மட்டுமே விரும்பி ஒருவன் வாழ்க்கை நடத்தக் கூடாது. மனிதன் ஒரு போதும் தனிப்பட்ட வாழ்க்கை வாழ முடியாது. அவன் சமுதாயத்தைச் சார்ந்தே வாழவேண்டும்.

ஜீசஸ் கூறினார், சமுதாயத்தில் நீ செய்ய வேண்டிய கடமைகளை உணராவிட்டால் உனது வாழ்க்கை வீண் என்று எங்கே ஒற்றுமை இருக்கிறதோ அங்கே தூய்மை இருக்கிறது, எங்கே தூய்மை இருக்கிறதோ அங்கே தெய்வீகம் இருக்கிறது. தெய்வீகம் இருக்குமிடத்தில் ஆனந்தம் இருக்கின்றது.

**ஆசைகள்:**

தம் உலகியல் ஆசைகளை நிறை வேற்றுமாறு செம்படவர்கள் யேசுநாதரிடம் வேண்டினார்கள். பீற்டருக்கு அதிகம் மீன் தேவைப்பட்டது. ஆனால் கடைசியில் அவர் உலகியல் ஆசைகளின் உபயோகமற்ற தன்மையை உணர்ந்து கொண்டார். யேசுநாதரின் போதனைப்படி உடலையும், மனதையும் விட்டு விலகி இருக்க வேண்டும் என நினைத்தார்.

யேசு அவர்களிடம் வெறுப்பைக் கைவிட்டு அனைவரையும் நேசித்து அனைவருக்கும் சேவை செய்யுமாறு அறிவுரை கூறினார். ஒற்றுமை என்ற தத்துவத்தின் மேல் நம்பிக்கை வைக்குமாறு வலியுறுத்தினார். யேசுநாதரின் பல சீடர்கள் தங்களுக்குத் தோன்றிய விதங்களில் எல்லாம் அவரவர்கள் வழியில் அவரது போதனைகளை எடுத்து விளக்கி வந்திருக்கிறனர்.

**மாத்யூ:**

யேசுநாதரின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவன் மாத்யூ அவனது தொழில் வருமான வரியை வசூல் செய்வது, அவன் செம்படவர்களை சந்தித்து வசூல் செய்வது வழக்கம். யேசுநாதர் தினந்தோறும் செம்படவர்களுக்கு புனிதமான அறிவுரைகளை எடுத்துச் சொல்வது வழக்கம்.

இவற்றையெல்லாம் குறிப்பெடுத்துக் கொண்டு அந்த அந்த அறிவுரைகளையெல்லாம் தொகுத்தே மாத்யூ 'புனித பைபிள்' எனும் நூலை எழுதினார். அதற்குப் பிறகு எத்தனையோ பேர் அவர்களது உணர்வுகளின் அடிப்படையில் பைபிள் எழுதினார்கள். எங்கேயும் யேசுநாதர் தன்னைக் கடவுள் என்றோ தலைவன் என்றோ குறிப்பிடவில்லை. அவர் எப்போதும் கடவுளை தந்தை என்றே குறிப்பிடுகிறார். ஒற்றுமையை உணர்வதற்கான பாதையை அவர் காட்டினார். அவர் எப்போதும் எதையும் பலவாறாகக் கண்டதில்லை. அதற்கான வாய்ப்பும் ஏற்படுத்திக் கொண்டதில்லை. எல்லோரும் தெய்வீகமானவர்களே என்பதையே அவர் சொல்லி வந்தார்.

**கடவுள்:**

ஆரம்பத்திலிருந்தே யேசுநாதர் தான் கடவுள் என்று கூறியதில்லை. அவர் கூறியது கடவுள் அவரது தந்தை என்பது மட்டுமே. அது மட்டுமல்ல மக்களுக்கு அவர் இருப்பது ஒரே கடவுளே. மற்ற அனைவரும் அவரது குழந்தைகளே! எனப் போதித்தார். அவருக்கு எதிராக விமர்சிப்பவர்கள் தலைமைப் பூசாரியிடம் அவரைப்பற்றிப் புகார் கூறி னார்கள்.

ஆனால் பூசாரிக்கு யேசுநாதர் உண்மையைத்தான், சத்தியத்தைத் தான் கூறுகிறார் என்பது தெரியும். இருப்பினும் அவர்கள் எவரும் யேசுநாதருக்கு ஆதரவாகப் பேசவில்லை. தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியில் சத்தியத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை.

அதனால் யேசுநாதர் சிலுவையில் அறையப்பட வேண்டுமென்ற தீர்மானம் வலுத்தது. கவர்னர் அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தார். இருப்பினும் கடைசியில் அதற்காக பச்சாத்தாவப் பட்டார். யேசுநாதர் சிலுவையில் இருந்து எழுந்தபோது தலைமைப் பூசாரியே அவரின் பெருமைகளை எடுத்து அனைவருக்கும் விளக்க ஆரம்பித்தார்.

**சிலுவை:**

யேசுநாதர் சிலுவையில் அறையப்படும் போது அசரீரி ஒன்று கேட்டது. "எல்லோரும் ஒன்றே என் மகனே அனைவரிடமும் ஒரே மாதிரி நடந்துகொள்" அன்னை மேரி கண்ணீர் சிந்தியபோது யேசுநாதர் அவரிடம் கூறினார்,

"மரணம் என்பது வாழ்க்கையின் உடை இறப்பு என்பது உடை மாற்றுவதைப் போல நீங்கள் யாரையாவது தினந்தோறும் ஒரே உடையைப் போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? தினம் உடை மாற்றுவதைப்போல பிறவி தோறும் உடலை மாற்றுகிறாய். உடலுக்குத்தான் மரணமே தவிர பிராண தத்துவத்துக்கு மரணமில்லை ஆத்மா என்பது இறவாதது, இரட்டைநிலை அற்றது இந்த இரட்டை நிலையற்ற தன்மையை உணர்வது தான் உண்மையான ஞானம் என யேசுநாதர் கூறினார்.

உடல் ஒருநாள் எப்படியும் அழியும் என்பது நிச்சயம். நீங்கள் தேகத்தின் மேல் பற்று வைத்தீர்களானால் நீங்கள் துன்பத்தை எதிர்கொள்ள வேண்டிவரும் அம்ருதத்துவத்தை அடையவும், ஆனந்தத்தை அனுபவிக்கவும் நீங்கள் உருவத்தையும், பெயரையும் கடக்க வேண்டும். உடல் என்று உங்களுக்கு இருக்கும் போது அதனைப் பாதுகாப்பது என்பது அவசியம்.

ஆனால் அதற்காக மிகவும் கவலைப்பட்டு அதன் மேல் அதிக பற்றுதல் கொள்ளுவது என்பது தேவையில்லை அஞ்ஞானம் தான் கவலைக்கு மூலகாரணம். எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். ஆகவே கவலைக்கு இடம் தராதீர்கள். ஆத்ம தத்துவத்தின் மேல் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். இது தான் யேசுநாதரின் முக்கியமான அறிவுரை

தொகுப்பு:- பத்மினி
ச. சாரதி தை 2002

நீ மற்றவர்களை எவ்வளவு நேசிக்கிறாயோ அதற்கு மேற்பட்ட மகிழ்ச்சியை உன்னால் அனுபவிக்க முடியும் - பாபா

# எதிர் காலத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்கிறேன்

## - அற்புதக் கதை -

1976ஆம் ஆண்டில் கோடை முகாம் முடிவுற்றதும், பக்தர்கள் பலர் ஊட்டியிலிருந்து திரும்பி விட்டனர். பகவான் சிறு வயதில் மாணவராக எவ்வாறு சிறப்புடன் நடந்து கொண்டார் என்பதைக் கேட்டு, கற்றுத் தெளிய வேண்டும் என்பதற்காக தமது இளமைப் பருவத்தைப் பற்றி ஒரு நாள் மாலை பகவான் மாணவரிடம் கூற எண்ணங் கொண்டார். வெளி நாட்டவரும், இன்னும் சிலரும் கூட ஹாலி லிருந்து எழுந்து செல்லும்படி பணிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு சம்பவமாக பகவான் விரித் துரைக்கும் போது எங்கள் கண் முன் அக்காட்சிகள் விரிந்து வர, எங்களுகுத் தெய்வீக உணர்ச்சி அதிகரித்துக் கொண்டே வந்தது. அருளுரையின் முடிவில் பகவான்,

"எதிர் காலத்தைப் பற்றி உங்களுக்குச் சிறிது சொல்லப் போகிறேன்" என்று கூறினார். டாக்டர் பகவந்தம் மொழி பெயர்ப்பை முடிப்பதற்கு முன், பகவான் கை வட்டமாகச் சுழன்றது. எங்கள் கண்முன்னால் நாலு அங்குல விட்டமுள்ள வட்டமான கரிய மெருகேற்றப் பட்ட மரத்தின் மேல் பதிக்கப் பட்ட வெள்ளியிலான அழகிய இந்திய நாட்டு வரைபடம் உருவாகியது. அச்சின்னத்தின் விளிம்பில் பல பெரிய விலை யுயர்ந்த கற்கள் பதிக்கப் பட்டிருந்தன.

ஒவ்வொரு கல்லிலிருந் தும் ஒரு வெள்ளிக்கோடு புறப்பட்டு இந்தியாவில் ஒவ் வொரு இடத்தைச் சுட்டிக் காட் டியவாறு இருந்தது. அக்கேந்தி ரங்களுக்குப் பொறுப்பாக உள்ள மக்களின் பெயர்களும் அங்கு குறிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொருவருக்கும் மனம் துள்ளியது. அந்த இலச் சினையைப் (Emblem) பார்க்க ஒவ்வொருவரும் ஆசைப் பட்டார்கள். கமராவிலுள்ள Lensஐக் கொண்டு, அவ்விலச் சினையைப் படிக்க முயன்றேன். தேவநாகரியில் எழுதப்பட்ட எழுத்துக்கள் மிகவும் நுண்ணிய தாக இருந்ததால் அவற்றைப் படிக்க முடியவில்லை.

பகவான் அந்த இலச் சியையை எடுத்துக் கொண்டு, மாணவரிடையே வந்து அதி லுள்ள பல விவரங்களையும் சுட்டிக் காண்பித்தார். இதயத்தின் ஆசை கெடுமளவுக்கு அதைத் தொட அனுமதித்தார். சிலர் கண்களிலும் ஒற்றிக் கொண்ட னர். நான் அபூர்வமான ஒரு நிகழ்ச்சியையும் கவனித்தேன்.

பகவான் அடிக்கடி "நான் இங்கு இருக்கிறேன் இருக் கிறேன்" என்று கூறி வந்தார். யாரும் அவர் கூறியதைக் கவ னிக்கவே இல்லை. அவர்கள் இலச்சினையால் கவரப்பட்டு, அதன் நுட்பத்திலேயே ஆழ்ந் திருந்தார்கள். பகவான் சொற் களில் இருந்த உட்சிறப்பை நானும் புரிந்து கொள்ளவில்லை. பகவான் சுற்றித்திரும்பி வந்த போது புகைப்படம் எடுப்பதற்காக பகவான் தனது உள்ளங்கையில் அந்த இலச்சினையை வைத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டினேன். பகவானும் ஆரம்ப காலத்தில், பேராசிரியர் கஸ்தூரி யும், இன்னும் சிலரும், ஒரு அற் புதத்தை காண்பிக்க வேண்டும் என்று பகவானை வேண்டிக் கொண்டார்கள். கஸ்தூரி பின் னால் வர, பகவான் மந்திரில் முன்னும் பின்னும் நடந்தார், கஸ்தூரியின் வேண்டு கோளைக் கவனிக்கவே இல்லை. மறுபடி யும் கஸ்தூரி வேண்டிக்கொள்ள ஆரம்பித்தார்.

பகவானுக்கு அவரது விருப்பத்தை நிறைவேற்றச் சம்மதமில்லை. பகவான் நடப் பதை நிறுத்திவிட்டு திரும்பி கஸ்தூரியிடம்

"நீயே அற்புதந்தான்" என்று கூறினார். கஸ்தூரி திகைப்பில் சிலையாகி நின்றார். பகவான் கூறியவற்றில் உள்ள இரண்டு முக்கிய அம்சங்களை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

முதலாவதாக, இவ்வுடல் பஞ்ச பூதங்களாலானது. ஆத்மா இவ்வுடலின் மூலம் வெளிப்படுத் திக் கொள்வதால், இறைவன் திருக்கோயில் என்றழைக்கப் படுகிறது.

இரண்டாவதாக, உடலின் பல உறுப்புக்கள் வழியாக, ஆத்மாவின் சில தெய்வீகத் தத்துவங்கள் தம்மை வெளிப் படுத்திக் கொள்கின்றன.

உதாரணமாக உடலின் மொத்த நலனுக்கும் கண்கள் வழியாக உள்ள பார்வையைப் பாதுகாத்து வளர்க்கவும் சூரிய தேவன் பொறுப்பாகிறார். சரஸ்வதி, வாக்கினை வளர்த்து, ஞானத்தை அளிக்கின்றார். வைசுவாநரர், உணவைச் செரித்து அதன் சூட்சும தத்து வத்தை ஆற்றலாக மாற்றுகிறார். ஆங்கிரஸர் உடல் வழியாகச் செல்கிறார். இந்தத் தெய்வீகத் தத்துவங்கள் தமது ஆதரவை நிறுத்திக் கொண்டால், குறிப் பிட்ட உறுப்பு துன்பமடைகிறது.

இவ்வாறு தெய்வீக தத்துவங்கள் காப்பாற்றுவதால், இம் மனித உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் ஒழுங்காக வேலை செய்கிறது இத் தெய்வீகத்தத்துவங்களின் முழு நிறைவும் சேர்ந்து மனிதனின் தெய்வத்துவத்தைப் பிரகடனம் செய்கின்றன. ஆகவேதான் பகவான் ''திவ்ய ஆத்ம-ஸ்வருபலாரா" என்று நம்மை அருமையுடன் அழைக்கிறார். "நீயே அற்புதம்" என்று பகவான் கூறுவதன் காரணம் இதுவே. இறைவன் இவ்வாறு மனிதன் மூலம் தன்னை பிரகடனப்படுத் திக் கொள்கிறார்.

தொகுப்பு:
**சு. சுமங்களா**
ச. சா. மார்ச் 199

### சாதனையின் சிறப்பு

காலையிலேயே பகல் உணவிற்காக சீட்டு வாங்கியவருக்கும்: அந்த நேரத்திற்குச் சென்று உணவு விடுதியில் உணவிற்காக முயற்சி செய்பவருக்கும் எத்தகைய வேறுபாடோ: இளமைப் பருவத்திலிருந்து சாதனைகளைச் செய்து வருபவருக்கும்: அப்போதைக்கப்போது: மறுபிறப்பு ஏற்படாமலிருப்பதற்காக சாதனைகளைச் செய்பவருக்கும். அவ்வளவே வேறுபாடு. அதாவது முன்னதாகவே உணவுச் சீட்டு வாங்கியவருக்கு உணவு கிடைப்பது உறுதி. அந்த சமயத்திற்குச் சென்று கேட்பவருக்கு உணவுகிடைப்பது சந்தேகம்.

- பகவான் பாபா -

உங்களை நிந்திப்பவர்களுக்காக செபம் செய்யுங்கள். - பைபிள் -



# ஆன்மீகத்தில் கட்டுப்பாடும் சுதந்திரமும்

ஆன்மீகம் என்றால் என்ன என்பதை இங்கு நாங்கள் முதலில் நோக்க வேண்டும். அதாவது தெய்வத்தை நோக்கிய பயணத்தின் படிநிலையாகவே இங்கு நாம் ஆன்மீகத்தை கொள்ளலாம். அதாவது எம்முள் உறைந் திருக்கும் தெய்வீகத்தை வெளிக் கொணர்ந்து அதன் மூலமாக ஒரு உன்னத நிலையை அடைவதற்கு ஒரு கருவியாக இந்த ஆன்மீகத்தை நாம் கருதலாம். அதாவது எமது வாழ்க்கையை வளம் பெறும் வகையில் நல்ல வழியில் நடத்தி செல்லும் வழியில் இந்த ஆன்மீகம் எமக்கு கை கொடுக்கின்றது. ஆன்மீகத்தில் கட்டுப்பாடும் சுதந்திரமும் என்று நாம் கருதும் போது கட்டுப்பாடு என்றால் என்ன சுதந்திரம் என்றால் என்ன என்பதை நாங்கள் நோக்கலாம். இவை பெரிய விடயங்களாக இருந்தாலும் கூட இளைஞர்களாகிய எமது அறிவுக்கு எட்டிய வரை நோக்கும் போது அதாவது கட்டுப்பாடு எனும் போது ஒழுங்கு அல்லது விதிமுறைகள் என்பதனை நாங்கள் இங்கு கருத்தில் கொள்ளலாம். கட்டுப்பாடு என்பது பிறரால் எமக்கு விதிக்கப்படும் போது எமக்கு அது துன்பமாகவும் கவலையை ஏற்படுத்துவதாகவும் இருக்கலாம். ஆனால் ஆன்மீ கத்தில் ஈடுபடும் போது அங்கு ஒரு விதிமுறைகளுக்கு ஏற்பவரை முறைகளுக்குள் ஏற்படுகின்ற போது தான் உன்னத நிலையை அடைந்து கொள்ளலாம். மற்றவர்கள் விதிக்கும் கட்டுப்பாடுகளை விட எமக்கு நாமே சில வரைமுறைகளை வைத்துக் கொண்டால் எமது இந்த ஆன்மீக முயற்சியில் வெற்றி பெறமுடியுமென்பது கருத்தாகும். அதாவது பிறர் எமக்கு / எம்மீது சில விதி முறைகளை சொல்லும் போது அது எமக்கு கஷ்டமாக இருக்கலாம். நாம் இவ்வாறு தான் ஒழுக வேண்டும் இவ் வாறுதான் நடக்க வேண்டும் என்று சொல்லும் போது உண்மையான உன்னத நிலைக்கு செல்லும் போது நாம் சில விதிமுறைகளினூடாக படிமுறைகளினூடாக சென்று அந்த உன்னத நிலையை இலகுவில் அடைந்து விடலாம். சுவாமி ஓரிடத்தில் சொல்கின்றார். எதை விட்டுக் கொடுத்தாலும் ஒழுங்கை அதாவது ஒழுக்கத்தை ஒரு போதும் நான் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று கூறுகின்றார். அந்த வகையில் நாம் ஒழுங்குடன் செயற்படும் போது சில விதிமுறைகளை உதாரணமாக மற்றவர்கள் எம்மை ஏசுவார்கள் அல்லது அவர்களுக்கு நாம் பணிந்து நடக்க வேண்டும் என்றதற்காக அன்றி எமக்கென நாம் இவ்வாறுதான் ஒழுக வேண்டும் இவ்வாறுதான் நடக்க வேண்டும் என்ற சில விதிமுறைகளை வகுத்துக் கொண்டால் எமது செயற்பாடுகள் இலகு வானவையாக அமைந்து கொண்டிருக்கும்.

“ஏனெனில் எமக்குள் உறைந்திருக்கும் அந்த தெய்வீகத்தை வெளிக் கொணர்வதற்கு சில படிமுறைகள் அவசியமாகின்றன. சுதந்திரம் என்று நோக்கும் போது நாம் எவ்வாறு செயற்படலாம். எதுவும் செய்யலாம், எங்கும் செல்லலாம் என்பது தான் எமது சுதந்திரம் என்று தற்போது கருதிக்கொண்டிருக்கிறார்கள். அதுவல்ல சுதந்திரம். சுதந்திரம் எனும் போது மற்றவர்களுடைய தடைகளுக்கோ அல்லது மற்றவர்களுடைய கருத்துக்களுக்கோ அப்பாற்பட்டு எமக்கு எது சரியென தெரிகின்றதோ அதை நாம் அதாவது கடவுள் மீது நம்பிக்கையை வைத்து நாம் எமது சிந்தனை சுதந்திரத்தோடு செயற்படும் போது அங்கு நாம் ஆன்மீகத்தில் ஈடுபடு வதற்கு பெரிதும் வழிவகுக்கின்றது. நாம் இளைஞர்கள் என்ற நிலையில் இருக்கும் போது மற்றவர்கள் எம்மை கேலி செய்தார்கள் ஏளனம் செய்தார்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு எமக்கு இந்தப் பாதைதான் சிறந்ததென எமது சிந்தனையை நாம் சீராக்கி சுதந்திரமாக சிந்தித்தோ மானால் ஆன்மீகம் என்பது எமக்கு வலு இலகுவானதாகவே அமையும். இதற்கு எமக்கு கல்வியானது வழி வகுக்கிறது.”

சுவாமி சொல்கிறார் கல்வியை இரண்டு வகையாக அதாவது வெளிப்புறம்பான கல்வி மற்றது உற்புறம்பான கல்வி என்று தற்போது நடைமுறையிலிருக்கின்ற கல்வியானது எமது சொத்து, சுகம், பட்டம், பணம் இவற்றை பெறுவதற்கே உதவுகின்றது. ஆனால் எமது ஒவ்வொருவரையும் நாம் உள்முகமாக நோக்கி எம்முள் உறைந்திருக்கின்ற அந்த உள் உணர்வுகளை வெளிக்கொணர வைப்பது ஆன்மீகக் கல்வி ஆன்மீகம் என்பதில் ஈடுபடுவதற்கு இந்த கல்வியானது உறுதுணையாகும். இதணையே சுவாமி தற்போது Educare என்பதன் மூலமாகவும் வெளிப்படுத்துகிறார். அதாவது சுவாமி இந்த Educare என்பதற்கு பலவிதமான கருத்துகளை கூறுகிறார் செய்யவேண்டிய கடமைகளை செய்யவேண்டிய நேரத்தில் செய்வது Educare என்று கூறுகிறார். அதாவது நாம் எந்தெந்த நேரத்தில் என்ன என்ன கடமைகளை செய்ய வேண்டுமோ அத்தருணத்தில் நாம் அதனை செய்யவேண்டும். அதாவது நாம் ஆன்மீகத்தில் ஈடுபடும் போது மற்றவர்களுடைய கட்டுப் பாடுகள் விதி முறைகளுக் கெல்லாம் அப்பாற்பட்டு நாம் சுயமாக சிந்தித்து /சுதந்திரமாக சிந்தித்து எமக்கென ஒரு பாதையை வகுத்து நேராக அதுவும் இளம் பராயத் டையதிலேயே அதை நாம் தொடங்கு வோமேயானால் எமது இலக்கு தெய்வீகத்தை அடையும் இலக்கு வந்து இலகுவானதாக அமையும் சுவாமி சொல்கிறார்.

Start Early
Drive Slovely
Speed Saftly

அதாவது நாம் ஆரம்பத்திலேயே இந்த பாதையை அதாவது ஆன்மீகத்தில் ஈடுபடும் போது சில கட்டுப்பாடுகளை எமக்கென அதாவது வரைமுறைகளை எமது சுயமான சிந்தனையின்படி சுதந்திரமாக சிந்தித்து செயற்படுவோமேயானால் ஆன்மீகத்தில் அது மிகவும் இலகுவானதாக இருக்கும்.

**செல்வி**
**மு. அமிர்தரஞ்சினி**

சுவாமி கூறுகின்றார் கல்வி என்பது ஒரு information மட்டுமேயன்றி transformation அலில் என்கிறார். அதாவது பண்பாடும் கலாச்சாரமும் சேர்ந்த கல்வியே transformation அதாவது மனிதர்களுள் மாற்றத்தை ஏற்படுத்த வல்லது என்று கூறுகின்றார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

**2002-10-06**இல் நடைபெற்ற இளைஞர் தின விழாவின் போது பேச்சுப் போட்டியில் **2**ஆம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாண நிலையத்தைச் சேர்ந்த செல்வி **K.** அமிர்தரஞ்சினி ஆற்றிய உரையும் **3**ஆம் இடத்தைப் பெற்ற கோண்டாவில் நிலையத்தைச் சேர்ந்த செல்வி **S.** சர்மிளா ஆற்றிய உரையும் **5**ஆம் **11**ஆம் பக்கங்களில் பிரசுரமாகின்றது.

தொகுப்பு:
**யாழ்ப்பாண நிலைய**
**இளைஞர் பிரிவு**

**ஆன்மீகத்தில் கட்டுப்பாடும் சுதந்திரமும் அவசியம் - பாபா**

# தேசிய சேவை மகாநாடு தொகுப்புரைகள்

## வடக்குக் கிழக்கில் சேவை சிறப்பாகச் செய்யப்படுகிறது

பிரசாந்தி நிலையத்தில் சர்வதேச சேவை மகாநாடு நடைபெற்றபோது எமக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதாவது இந்த சேவை மகாநாடு பற்றிய விளக்கத்தை உங்கள் நாட்டில் ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள சத்திய சாயி நிலையங்களுக்குச் சென்று விளக்கம் கொடுக்க வேண்டும் என்று.

அதன் முதலாவது மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவேண்டும் என்று வடபிராந்தியத் தலைவர் விரும்பினார். அதன்படி இன்று இந்த மகாநாடு இங்கு நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் சேவையைப் பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை. இலங்கையிலேயே வடக்குக் கிழக்கில் தான் சிறப்பாக சேவை செய்யப்படுகிறது. இந்த இரண்டு பிராந்தியத்திலும் செய்யப்படும் சேவையால் ஸ்ரீலங்காவில் பிரசாந்திக் கொடி பறந்து கொண்டு இருக்கிறது. என்றாலும் சொல்ல வேண்டிய கடமை ஒன்று உண்டு. நாம் மேலும் சில சேவைத் திட்டங்களைத் தீட்டிச் செயல் படவேண்டும்.

சேவைகளைச் செய்யும் போது அன்புடனும் பணிவுடனும் செய்ய வேண்டும். நான் படித்தவன்; பணக்காரன் என்ற அகங்காரம் இருக்கக் கூடாது.

சுவாமியின் அருள் உரைகளை மொழிபெயர்ப்பவர் பேராசிரியர் அனில்குமார். இவர் சிறுவயதில் இருந்தே சுவாமியின் பக்தர். சுவாமியின் பாதநமஸ்காரம், ஆசிகள் யாவற்றையும் பெற்றிருந்தார். அவர் தனது மேற்படிப்புக்காக அமெரிக்கா செல்வதற்கு முன் சுவாமியின் ஆசியையும் பாதநமஸ்காரத்தையும் பெற்றுச் சென்றார். அமெரிக்காவில் உயர் கல்வி கற்று பேராசிரியர் பட்டம் பெற்று இந்தியா திரும்பினார். பிரசாந்தி நிலையம் சென்ற அனில்குமார் கஸ்தூரியிடம் சென்று,

''நான் என் படிப்பை முடித்துக் கொண்டு திரும்பி விட்டேன். இனி நான் இங்கு சேவை செய்ய விரும்புகிறேன். என்ன சேவை செய்ய வேண்டும்...? என்று கேட்டார்.

கஸ்தூரி அவர் படிப்பைப் பற்றி எல்லாம் கேட்டுவிட்டு, "நல்லது... நீங்கள் செய்ய வேண்டிய சேவையை சொல்கிறேன். எல்லோரும் உணவு உண்டபின சமையல் அறை சென்று பாத்திரங்களைக் கழுவி வைத்தால் சரி..." என்று கூறினார்.

"கஸ்தூரிதானா இப்படிக் கூறுகிறார்...? எனது படிப்பை பற்றி இவருக்கு என்ன தெரியும்...?" என்று வருத்தப்பட்டுக் கொண்டு ஒரு கிழமையாக பாத்திரம் கழுவும் வேலையைச் செய்தார். அனில்குமார். பின் கஸ்தூரியிடம் சென்று,

கடந்த ஐப்பசி மாதம் **26ஆம் 27ஆம்** திகதிகளில் திருநெல்வேலி சத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் தேசிய சேவை மகாநாடு நடைபெற்றது. இம் மகாநாட்டில் இரண்டு நாட்களும் உரையாற்றிய சாயி அன்பர்களின் உரைகளின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

நான் ஒரு கிழமையாக இந்த வேலையை ஒழுங்காக செய்து முடித்து விட்டேன். என்று கூறினார்.

''நல்லது எத்தனை பாத்திரம் கழுவினீர்கள்''... என்று கேட்டார் கஸ்தூரி.

"60, 65 பாத்திரங்கள்" என்று கூறினார் அனில்குமார்.

இது போதாது 150 பாத்திரங்களாவது கழுவ வேண்டும் என்று சொல்லி திரும்பவும் அந்த வேலையைச் செய்யுமாறு பணித்தார். திரும்பவும் பாத்திரங்களைக் கழுவத் தொடங்கினார் அனில்குமார்.

**மத்திய இணைப்பாளர் ஸ்ரீ. M. வன்னியசேகரம்**

அப்படிச் செய்து கொண்டு இருக்கும் போது, "அவர் ஏன் இப்படி தன்னைசேவை செய்ய அனுப்புகிறார் என்று சிந்தித்த போதுதான் விளங்கியது.

அதாவது, நான் ஒரு பெரிய பேராசிரியர் என்ற அகம்பாவம் என்னுள் உருப்பெற்றிருந்ததையும் அதைத் தவிர்க்கவே சுவாமி கஸ்தூரி மூலம் இந்தச் சேவையை செய்யும்படி பணித்தார். என்ற உண்மை தெரிய வந்தது. அன்றிலிருந்து அந்த அகங்கார எண்ணத்தை என்னுள் இருந்து விரட்டத் தொடங்கினேன் என்று கூறினார் அனில்குமார்.

## தேவையுள்ள இடத்தில் சேவை செய்ய வேண்டும்

இந்தியாவில் ஒரு மானிலத்தில் உணவுக்கு வழியில்லாத ஒரு தாய் தன் குழந்தைகளுக்கு நஞ்சு கொடுத்து தானும் குடித்து இறந்து போனாள். இந்தப் பத்திரிகைச் செய்தியைப் பற்றிக் குறிப்பிட்ட சுவாமி சமுதாயத்தில் இறங்கி சமுதாய சேவையைச் செய்யுங்கள் என்று ஊக்குவிக்கிறார். இந்தச் செய்திதான் கிராமசேவைக்கு பெரும்உந்துதலாக விளங்கியது.

சேவை தேவையுள்ள இடத்தில் செய்யவேண்டும். இதற்கு உதாரணமாக பிரிட்டிஸ் இராணுவத்தில் நடந்த ஒரு சம்பவத்தை கூறுகிறேன். போர் நடந்து கொண்டு இருக்கிறது. காயப்பட்ட ஜெனரல் இறக்கும் நிலையில் கிடந்தபடி தண்ணீர்.... தண்ணீர் எனக் கேட்கிறார். அதே நேரத்தில் பக்கத்தில் விழுந்து கிடக்கும் ஒரு சாதாரண சிப்பாயும் தண்ணீ... தண்ணீர் என அலறுகிறார். அப்போது ஜெனரல் சொன்னார்.

"ஐயா...! முதலில் அந்தச் சிப்பாய்க்கு தண்ணீர் கொடுங்கள்...!!.

இதுதான் சேவை. சாகப்போகும் நிலையிலும் அவருடைய உயர்ந்த சேவை மனப்பான்மையை பார்க்க வேண்டும். எனவே எங்கு தேவை ஏற்படுகிறதோ அங்கு சேவை செய்ய வேண்டும்.

மேலும் சேவை என்பது ஒரு செயற்பாடு மட்டுமல்ல, அது ஒரு மனோபாவமும் கூட. "லோகா சமஸ்தா சுகினோ பவந்து என்று பிரார்த்தனை செய்வது கூட ஒரு சேவைதான். எல்லாவற்றுக்கும் மனம்தான் காரணம். சேவை என்பது மனிதனின் தர்மமும் ஆகும்.

காயத்திரி மந்திரத்தைச் சொல்லுங்கள் அதுவும் ஒரு சேவைதான். உண்மையில் இந்த மந்திரத்தை நாம் உச்சரிக்கும் போது அதன் அதிர்வுகள் எமக்கு மட்டுமல்ல, அது சூழல், சுற்றாடலையும் தூய்மையாக்குகிறது.

**ஸ்ரீ. P. நாகராஜன்**
தலைவர் வவுனியா
சாயி நிலையம்

நோய்கள் வராது தடுக்கிறது. மன அமைதியையும் ஏற்படுத்துகிறது. உச்சரிக்க உச்சரிக்க ஆத்ம சக்தி கிடைக்கும். ஆத்ம சக்தி கிடைத்தால் எமக்கு சேவை செய்யும் மனோபலம் ஏற்படும்.

பாபா சிறுவனாக பாடசாலை செல்லும் நாட்களில் மற்றவர்களுக்காக தண்ணீர் சுமந்து சேவை செய்தார். தாய் ஈஸ்வரம்மா முதுகில் உள்ள தழும்பைப் பார்த்து, "என்ன காயம்" என்று கேட்டார்.

''மற்றவர்களுக்காக தண்ணீர் சுமந்ததால் ஏற்பட்ட காயம்'' என்று மற்றப் பிள்ளைகள் சொன்னார்கள். தாயார் கவலை மேலிட இப்படிப்பட்ட வேலை செய்யாதே என்று தடுத்தார். ஆனால் பாபா சொன்னார்,

"நான் மற்றவர்களுடைய சுமையைத் தாங்க வந்துள்ளேன்.

# தேசிய சேவை மகாநாடு தொகுப்புரைகள்

## அங்கத்தவர்கள் நடை, உடையில் முழுமாற்றம் வேண்டும்

சத்யசாயி நிறுவனங்கள் இந்த நாட்டில் ஏற்படுத்திய மிகப்பெரிய திட்டங்கள்.

(1) காயத்திரி மந்திரத்தின் மகிமையை உணரச் செய்து மாணவர்களூடாக பெரும்பாலானவர்கள் இதை உச்சரிக்கச் செய்தது.

(2) சேவையின் மகத்துவத்தை உணர்த்தி தன்னலம் மற்ற சேவையில் ஈடுபடச் செய்தது.

(3) மனிதமேம்பாட்டுக் கல்வியை ஆசிரியர் மாணவரிடையில் புகுத்தியது.

நாம் செய்த சேவைகளை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. ஆனால் நாம் இன்னும் சேவை செய்ய வேண்டும் அத்துடன் சாயி பக்தர்களாகிய நாம் எப்போதும் சுவாமியின் எங்கும் வியாபகமுள்ள தன்மையை நினைவில் கொள்ளவேண்டும். இதற்கு ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன்.

அவுஸ்ரேலியாவில் இருந்து வந்த பக்தர்கள் சிலரால் சுவாமியின் முன்னிலையில் ஒரு நாடகம் நடிக்கப் பட்டது. அவர்களுடன் வந்த ஒரு பெண்ணிடம்,

ஸ்ரீ. S. சிவஞானம்
ஆலோசகர்,
சத்ய சாயி சேவா நிறுவனங்கள்
இலங்கை.

"சுவாமியின் முன்னால் மேடை ஏறி இரண்டு நிமிடம் நடிக்கப் போகிறீர்களா அல்லது மேடைக்குப் பின்னால் நின்று நாடகம் முழுநேரமும் சேவை செய்யப் போகிறீர்களா...?" என்று கேட்கப்பட்டது.

ஆனால் அந்தப் பெற்றோர் சுவாமியின் முன்னால் சென்றால் சுவாமி தன்னைக் கவனிப்பார் என்று எண்ணி இரண்டு நிமிடங்கள் ஏறி நடிக்க ஒப்புக் கொண்டு நடித்து முடித்தார்.

அவர் நடிக்கும் போதோ.. அல்லது நடிப்பின் பின் எல்லோரும் சுவாமியிடம் ஆசி பெற்ற போதோ சுவாமி அவரைக் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. சுவாமி தன்னைக் கவனிக்கவில்லை என்று மிகவும் கவலைப்பட்டார். அந்தப் பெண் அடுத்தநாள் தர்சனின் போது சுவாமி அவருக்கு முன்னாள் சென்று,

"நான் மேடைக்கு முன் னாலும் மேடைக்கு பின்னாலும் பக்கத்திலும், மேலும் கீழும் எங்கும் இருக்கிறேன்" என்று கூறினார். எனவே சுவாமியின் இந்த எங்கும் வியாபகமான தன்மையை நாம் நிலைவில் கொண்டு செயல் புரிய வேண்டும்.

மேலும், நாம் திட்டங்கள் போடும் போது முதலில் கொள்கையையும் அதை நிறைவேற்ற தேவையான மனிதர்களையும் கவனத்தில் கொள்ளவேண்டும்

மேலும், சாயி பக்தர்களாகிய நாம் எமது எல்லா நடவடிக்கைகளிலும் மிகவும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். பெண்கள் தொப்புழுக்கு கீழே சேலை உடுப்பதைத் தவிர்க்க வேண்டும். நான் நினைக்கிறேன் வரும் 2003ஆம் ஆண்டளவில் சத்ய சாயி நிறுவன அங்கத்தவர்கள் யாவரும் தமது உடை, நடை, எல்லாவற்றிலும் முழுமாற்றத்தைக் கொண்டு திகழ வேண்டும். அத்துடன் சகல அங்கத்தவர்களும் சைவ உணவையே உண்ண வேண்டும்.

# Educare மூலம் சேவை

நான் ஒன்றும் புதிதாக உங்களுக்கு சொல்ல வரவில்லை. உங்களுக்குள் இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்து செயல்படும் போது அது சேவையாகப் பரிணமிக்கிறது. எஜுகேர் மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ளும் போது அது சேவையாக மலர்கிறது.


ஆத்மீகம், சேவை இவற்றில் ஈடுபட எஜுகேர் அவசியம். இங்கு எஜுகேரில் அடிப்படையாக இருப்பது பிரேமை (அன்பு) தான். சேவை செய்யத் தேவையான சக்தி பிரேமையில் இருந்தே கிடைக்கிறது. வாழ்வுக்குத் தேவையானது அன்புதான். அன்பாகச் செயல்படுங்கள். அன்பாகப் பேசுங்கள் அன்பாகப் பழகுங்கள் அன்பின் மூலம் தான் எதையும் செயலாற்றும் சக்தி கிடைக்கிறது.

பிரேமையின் சக்தியால் எமது எண்ணம், சொல், செயல் இவற்றால் நாம் சேவையைச் செய்கிறோம். இப்படி நாம் சேவை செய்வதால் அதன் விளைவாக எமக்கு சாந்தி கிடைக்கிறது.

உலகியான வாழ்வு வாழும் போது இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தி வாழ்வது இதுவே எஜுகேர் (Educare) சுவாமி கூறிய 5Dக்களும் இவற்றுள் அடங்கும்.

அன்புடன் நாம் செயல்படும் போது கடமை, கட்டுப்பாடு, திடகாத்திரம் என்பவற்றுடன் சேவையாற்றக் கூடியதாக இருக்கும். இதன் விளைவாக சாந்தி பெற்ற நிலையில் பகுத்தறியும் தன்மை ஏற்படுகிறது. அதனால் அகிம்சை உருவாகிறது.

இவ்வளவு செயல்பாடும் அறி மனதில் நடைபெறுகிறது. சாந்தி பெற்ற இந்த நிலையில் உயர்மனத்தினால் பஞ்சபூதங்களுடன் இசைவு ஏற்படுகிறது. எல்லாம் ஒன்று என்ற அந்த நிலை உணரப்படுகிறது. அதனால் அகிம்சை உருவாகிறது.




பக்தியினால் எம்முள் இறைவன் இருக்கிறார் என்ற உணர்வு ஏற்படுகிறது. இதனால் தன்னம்பிக்கை உருவாகிறது இந்த உணர்வுடன் சேவை செய்யும் போது சுயதிருப்தி உருவாகிறது. சுயதிருப்தி உருவாகியதன் விளைவாக சுயநலத்தியாகம் ஏற்படுகிறது. இதனால் தன்னை உணரும் நிலை ஏற்படுகிறது.

சேவையை முதலில் எங்கே தொடங்கலாம். வீட்டில் தான். பாத்ருமில் செய்யலாம். பூந்தோட்டத்தில், சமையல் அறையில், சுற்றாடலைத் துப்பரவாக்கி, பெற்றோர் பெரியோரைப் பேணுதல் போன்ற சேவைகள்.

பேராசிரியர்
ஸ்ரீ. சிவஞானசுந்தரம்

வீட்டை விட்டு வெளியில் நீங்கள் வேலை செய்யும் வேலைத்தலத்தில், சாயி நிலையத்தில், பள்ளிக்கூடம், வைத்தியசாலை போன்ற இடங்களில் சேவைகளைச் செய்யலாம். இவைகள் எல்லாம் எஜுகெயர்தான்.

என்ன சேவை யாருக்குச் செய்தாலும் அது பாபாவுக்கு செய்கிறோம் என்ற எண்ணத்தில் செய்ய வேண்டும்.. இதுதான் எஜுகேர்.

# தேசிய சேவை மகாநாடு தொகுப்புரைகள்

## சேவையூடாக மாற்றம்

சேவை தெய்வீகத்தை நோக்கிய எமது பயணத்தை துரிதப்படுத்துகிறது. அதாவது எமக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் எமது பாதையைத் துரிதப்படுத்துகிறது.

மனிதன் வெகுமதி மதிப்பு இரண்டிலும் ஆசை வைக்காது சேவை, பிரதிபலனை எதிர்பார்க்காத சேவையாக, அதுவே குறிக்கோளாக இருக்கவேண்டும். இயற்கை இப்பாவபாவ சேவையை எமக்குக் காட்டி நிற்கிறது. மரங்கள் தன்னை வெட்டுகிறவர்களுக்கும், கல்லுவிட்டெறிபவர்களுக்கும் இலைகளையும், காய்கள் கனிகளையும் கொடுக்கிறது.

மேலும், சேவை மூலம் ஏற்படும் (Trans formation) நிலைமாற்றம். எம்மை உலகியல் செல்வாக்கில் இருந்து விடுபட்டு எமது சுயமான நன்மைக்கு அழைத்துச் செல்கிறது. இந்த நிலைமாற்றம் ஏற்படவிடாது எமக்குள் இருக்கும் பலவித அழுக்குகள், கெட்ட இயல்புகள் தடுக்கின்றன. ஆனால் சேவை இந்த அழுக்குகளை அகற்றி எமக்குள் ஆத்ம பிரகாசம் உருவாக உதவுகிறது.

அடுத்ததாக சேவை இறையர்ப்பணமாகச் செய்யப்படவேண்டும். அன்புடன் செய்யப்பட வேண்டும். குசேலர், பகவான் கிருஷ்ணரைப் பார்க்கச் சென்ற போது அவர் மனைவி ஒருபிடி அவலைக் கொடுத்து அனுப்பினாள். கிருஷ்ணரும் மிகவும் ஆவலாக உண்ணுகிறார் உண்மையில் கிருஷ்ணர் உண்டது அவல் அல்ல. அவர்கள் அன்பைத்தான். எனவே சேவை இறையர்ப்பணமாக அன்பாகச் செய்ய வேண்டும்.

சாயிகாட்டும் புதிய உலகம்.
Help Ever Hurt Never,
Love all

அதாவது மற்றவர்களுக்கு துன்பம் கொடுக்காது அன்புடன் உதவி செய்யும் மனிதனாக இருக்கும் உலகத்தையே சுவாமி எமக்கு காட்டும் புதிய உலகமாகும்.

நிலைமாற்றம் என்னும் போது உடல் என்ற நிலையில் இருந்து ஆத்மா என்ற நிலைக்கு எம்மை மாற்றிக் கொள்வதாகும்.


*ஸ்ரீ. T. குலவீரசிங்கம்*
தலைவர்
சத்ய சாயி சேவா நிலையம்
திருகோணமலை


**(Transformation)**
**நிலைமாற்றம்**

எமக்குள் ஏற்படும் இந்த மாற்றம் மூன்று நிலைகளில் ஏற்பட வேண்டும்.

1) தனிநபர் மாற்றம்
2) சமுதாய மாற்றம்
3) தேசிய மாற்றம்

தனிநபர் மாற்றம் ஏற்படும்போது அது சமுதாய மாற்றமாக மாறி பின்பு தேசிய மாற்றமாக உருவாகும்.

1) சமூகம் என்று சொல்லும் போது நாம் சந்திக்கும் முதல் சமூகம் குடும்பம் ஆகும். முதலில் நாம் குடும்பத்தில் சேவை செய்ய வேண்டும். பெற்றோர்கள், பெரியோர்கள், நோயாளிகள் இருந்தால் அவர்களுக்கு செய்ய வேண்டும்.

2) வேலைத் தலங்கள்
3) சாயி நிலையங்கள்

சாயி நிலையங்களில் சாயி சகோதர சகோதரிகளுடன் இணைந்து செயலாற்றுதல், அத்துடன் அங்கு சேவை பெறுவருபவர்களுடன் அன்புடன் அணுகி சேவை செய்வது இரண்டும் சமூக சேவையாகும்.

சேவை என்பது ஒரு செயல்பாடு அல்ல சேவை என்பது ஒரு மனோபாவம். அதாவது சேவை செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வுடன் இருத்தல் ஆகும். அமைதியாக இருப்பதும் ஒரு சேவையாகும்.

சேவை செய்வது பக்தனின் கடமை நிலை மாற்றத்தை ஏற்படுத்துவது பகவானின் பொறுப்பு. சேவை எமக்குத் தரப்பட்ட சந்தர்ப்பம் அதைச் சரியான முறையில் பயன்படுத்துவது எமது கடமை.

பக்தி, கர்மம், ஞானம், யோகங்கள் இந்த மூன்று யோகங்களுக்கும் ஆதாரமாக உள்ள ஒரு யோகம் பிரேம யோகமாகும். எனவே நாம பிரேமையுடன் சேவையை செய்ய வேண்டும்.

மேலும், சேவை செய்வதற்கு முதலில் நான் யார் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். நான் யார்? கீதை சொல்கிறது, நீ என்னுடைய அம்சம். என்னுடைய பிரதிபலிப்பு என்றும், அதாவது அனைத்து உயிரினங்களிலும் உள்ளுறையும் ஆத்மா ஒன்று தான் என்னுள்ளும் விளங்குகிறது என்ற அந்தத் தூய உள்ளுணர்வுடன் சேவை ஆற்றும் போதுதான் அது இறைவனுக்கு செய்யும் சேவையாக மாறுகிறது.

***

### பிரார்த்தனை

1) எனக்கு உலகப் பொருட்களை எல்லாம் கசப்பாக மாற்றும்: துன்பந் தருவனவற்றையும் முரணாயிருப்பனவற்றையும் பொறுமையாக எனக்கு மாற்றும். அற்பமான சிருஷ்டிகளை இகழ்ச்சியாகவும் மறதியாகவும் மாற்றும்.

இக்கணம் முதலே என்றைக்கும் நீரே எனக்கு அமுதமாவீராக: ஏனெனில் நீரே எனக்கு உண்ணும் பருகும் நீரும் ஆவீர். எனது அன்பும் ஆனந்தமும் நீரே. எனக்கு ரசமும்: எனது நன்மையனைத்தும் நீரே.

உமது சாந்நித்யத்தால் என்னை முழுதும் கொழுத்தி விழுங்கி என்னை மாற்றி உம்மோடு ஐக்கியமாக்கிக் கொள்வீராக.

2) எனது நெஞ்சத்துள் ஐக்கியத்தை ஏற்படுத்தும் தமது கருணையாலும் தீவிரமான அன்பினால் விளையும் நெஞ்சுக் கசிவாலும் உருக்கத்தாலும் உம்மோடு இரண்டறக் கலந்து ஒன்றாகுமாறு அருளுவீராக...!

- தாமஸ். அ. கெம்பிஸ் -
(ஒரு கிறிஸ்தவப் பேரடியார்)



# ஒவ்வொரு யோகத்தின் சிறப்பையும் விளக்கும் கதைகள்:

கீதை ஜீவ - பிரம்ம ஐக்கியத்துக்கான பல வழிகளை பல யோகங்களைக் கற்பிக்கிறது. அந்த ஐக்கியம், இயேசு பிரான் கூறிய உருவகக் கதையான "ஊதாரி மகன்" கதையில், ஊதாரி மகன் மறுபடி நேசமிகுந்த தன் தந்தையின் வீட்டுக்குத் திரும்புவதைப் போன்றது. வாழ்க்கையின் கொந்தளிப்பிலிருந்து ஜீவன் விடுபட்டு தனது உண்மை இயல்பாகிய ஒப்பற்ற அமைதியை, ஆனந்தத்தை, மங்களத்தை அடைகிறது. அதுவே இறைவனின் தன்மையும் இயல்புமாகும்.

பிரபு கிருஷ்ணனால் கீதையில் உபதேசிக்கப்பட்ட பலவகை வழிகள் பின்வருமாறு:

**1) கர்மயோகம்** (செயல்வழி)

நியமிக்கப்பட்ட கடமைகளை ஒருவன் முறை தவறாது ஆற்ற வேண்டும். பலனில் ஆசை வைக்கலாகாது. செயல் முழுமையான திறமை கொண்டதாகவும், பூரணமாகவும் இருக்க வேண்டும். "யோக: கர்மஸ" கௌஸலம்" என்று கூறப்படுகிறது. கர்மயோகி பற்றுதலில்லாது, அகங்காரமில்லாது, செயலையும் அதன் பயனையும் இறைவனுக்கு அர்ப்பணித்துச் செயல்படுகிறான். அவன் எப்போதும் சமூகத்தின் நலனுக்கும், எல்லோரின் நலனுக்குமாக, சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறான்.

**2) பக்தியோகம் – பக்திவழி**
(பக்தியுணர்ச்சி வழி)

பக்தியோகத்தில், கடவுளிடம் கொண்டுள்ள ஆழ்ந்த பக்தியால் மனிதன் தூண்டப்படுகிறான். பக்தன் உணர்ச்சிகள் மிகுந்தவன். ஆனால் அவனது எல்லா உணர்வுகளும் உணர்ச்சிகளும் அவனது பக்திக்குப் பாத்திரமான கடவுளையே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும். கடவுளை வழிபடுவதில் அவன் மிகவும் ஆனந்தமடைகிறான். அவன் பக்தி முதிரும்போது அவனது கண்ணோட்டம் மாறுகிறது. உலகம் முழுவதும் இறைவனால் மட்டுமே நிரம்பப் பெற்றுள்ளது என்பதைக் காண்கிறான்.

**3) ராஜயோகம்:**
(மனக்கட்டுப்பாட்டின் வழி அல்லது (அறிவுணர்வின் வழி)

மனதை அசைவற்றிருக்கச் செய்வதன் மூலம், மனத்தின் கொந்தளிப்புகளைச் சமப்படுத்துவதன் மூலம் ஆத்மாவை ஒரேமுக நோக்குடன் தியானம் செய்வதன் மூலம், ஜீவன் கைவல்ய நிலையை அடைகிறான். தான் என்றும் பரிசுத்தமானவன், சுவடில்லாதவன், மாறாதவன், நித்தியமானவன், பிரகிருதியினின்று வேறுபட்டவன் என்பதை அறிகிறான்.

**4) ஞானயோகம்**
(அறிவின்வழி)

ஞானயோகத்தில், தனது உண்மையிருப்பு என்ன என்று அறிவு விசாரிக்கத் தொடங்குகிறது. இதற்கு வல்லமையான தீர்மானம் (Will) வேண்டும். முதலில் ஒவ்வொன்றையும் நானில்லை என்று விலக்குகிறது. முடிவில் உண்மையிருப்பை ஆத்மாவை, சலனமற்ற உள்ளுணர்வால் அனுபவிக்கிறது. அறிந்த ஞானி எல்லாவற்றிலும் தன்னையும், தன்னில் எல்லாவற்றையும் காண்கிறான். அவனைப் பொறுத்தவரையில், அவனே ஆத்மா, இவ்வுலகமுழுவதும் இவ்வுலகிலுள்ள அனைத்தும் ஆத்மாவே தவிர வேறல்ல; ஆத்மாவிலிருந்து, கடவுளிலிருந்து வேறுபட்டது, வேறு ஏதுவுமே இல்லை.

## கல்விப்பகுதி - I

மனிதர் ஒவ்வொருவரும் வெவ்வேறு நிலையும், வெவ்வேறு மனோபாவமும் கொண்டவர். ஆகவே பல்வேறு மக்களுக்குத் தகுந்தவாறான பல்வேறு வழிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. சுறுசுறுப்பான தன்மையுள்ளவனுக்கு, கர்மயோகம் பொருத்தமானது. உணர்ச்சிவசப்படுபவனுக்கு பக்தியோகம் பொருந்தும். ஆராயும் தன்மை உள்ளவனுக்கு ஞானயோகம் ஏற்றது. உணர்ச்சியும், அறிவுக் கூர்மையும் ஒருங்குசேர அமைந்தவனுக்கு, ராஜயோகம் பொருத்தமாகலாம். யோகங்கள் அனைத்தும் ஓரிடத்தில் முடிகின்றன. அதுவே தெய்வீகப் பேருணர்வு அல்லது தன்னையறிந்த நிலை, இடைவழியில், முழுநிறைவு அடையாத போது, ஒரு யோகம் மற்றதைவிடச் சிறந்ததாகத் தோன்றும். ஆனால் முடிவான நிலையில் கர்மயோகியே பக்தனுமாவான், ஞானியுமாவான்.இது போலத் தான் ஒவ்வொருவரும், கீழ்க்கண்ட கதைகள் இந்தக் கருத்தை வலியுத்துகின்றன.

**கர்மயோகம்:**

இந்தக்கதை, மகாபாரதத்தில் வருவது. ஆன்மீக வாழ்க்கையில் ஆர்வங்கொண்ட அந்தண இளைஞன், தனது பெற்றோரையும், குடும்பத்தையும் விட்டு விலகி துறவற வாழ்க்கையை மேற்கொள்கிறான். விரதங்கள், தவம் ஆகியவற்றில் ஈடுபட்டான். கிராமத்துக்கு வெளியே உள்ள காட்டில் அவன் தங்குவது வழக்கம். காலை தியானத்தை முடித்துக் கொண்டு, பிட்சைக்கு காலையில் கிராமத்துக்கு வருவது வழக்கம்.

காட்டிலுள்ள, மரத்தடியில் வழக்கம்போல ஒருநாள் தியானம் செய்து கொண்டிருந்தான். நடுப்பகலாயிற்று; பிட்சைக்குக் கிளம்பும் நேரம். அதே சமயம், மேலிருந்த கிளைகளிலுள்ள ஒரு பறவையிட்ட எச்சம் அவன் தலைமேல் விழுந்தது. சினத்துடன் மேலே பார்த்தான். அங்கே ஒரு கொக்கு கிளைகள் மேலே உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவன் சினத்துடன் கொக்கைக் காண, அது உடனே இறந்து கீழே வீழ்ந்து சாம்பலாயிற்று. அந்த அந்தணன் மிகவும் ஆச்சரியம் அடைந்தான். உற்சாகமடைந்தான். கர்வப்பட்டான். தன் உடல் மேல் எச்சமிட்ட கொக்கு சாவது சரியே என்று நினைத்தான்.

இத்தகைய கர்வத்துடன் அவன் கிராமத்துக்கு நடந்து சென்றான். ஒரு வீட்டிற்கு முன்னால் நின்று, பிட்சை வேண்டுமென்று கேட்டான். உள்ளிருந்த பெண்மணி, 'தயவு செய்து காத்திருங்கள்' என்றாள். சிறிது நேரம் சென்றது. அவள் வெளியே வந்து பிட்சையிடவில்லை. இவனுக்கு மனவமைதி குறைந்தது. படபடப்படைந்தான். என் போன்ற தபஸ்ஸியை எவ்வாறு கௌரவிப்பது என்று இந்த மூடப் பெண்மணிக்குத் தெரியவில்லை' என்று நினைத்தான்.

எரிச்சல் சினமாக மாறியது. சாபமிட வேண்டும் என்றும், தனது ஆற்றலை வெளிப்படுத்த வேண்டுமென்றும் தோன்றியது. அக்கணம் உள்ளே அவன் கொந்தளித்துக் கொண்டிருந்த கோது உள்ளே இருந்தவாறு அந்தப் பெண்மணி அமைதி குன்றாது நிதானமாக, "பிராமணரே உங்கள் கோபத்தால் சாம்பலாவதற்கு நான் கொக்கல்ல. தயவு செய்து காத்திருங்கள். என் கனவனுக்கு நான் பணிவிடை செய்கிறேன். வேலை முடிந்ததும், உங்களை கவனித்து, பிச்சையளிக்கிறேன்" என்று கூறினாள் பிராமணனுக்கு ஒரே ஆச்சரியம்! அந்தப் பெண் தன்னை இன்னும் வந்து பார்க்கவில்லை, தன் எண்ணங்களை தெரிந்து கொண்டாள்.

காட்டில் நடந்ததையும் அவள் அறிந்தாள் இது எப்படி? முடிவில் பிச்சையுடன் அம்மாதரிசி வெளியே வந்த போது, காக்கவைத்தற்கு மன்னிப்புக் கேட்டு, தாமதம் தவிர்க்க முடியவில்லை என்றும், கணவனுக்குப் பணிவிடை செய்வது ஒரு பெண்ணுக்கு முதற்கடமையென்றும் அதனால் தாமதம் என்று கூறினாள்.

பிராமணனின் கர்வம் தவிடு பொடியானது. அவன் வெட்கமடைந்தான். இத்தகைய உயர்ந்த அறிவை அவள் எவ்வாறு பெற்றாள் என்பதைக் கூறவேண்டுமென்றும் தனக்குக் குருவாக இருக்க வேண்டும் என்றும் வேண்டினான். "நான் சாதாரண இல்லத்தரசி, படிப்பறிவில்லாதவள், என்னைப் பொருத்தவரையில் என் கணவருக்குச் செய்ய வேண்டிய கடமையே முதலாவதாகும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

பாலவிஹாஸ் பாடத்திட்டத்தின் பிரிவு IIற்குரிய பகவத் கீதையின் நான்கு யோகத்தின் விளக்கமும் அவற்றுக் குரிய கதைகளும்: ஸ்லோகங்களும்: அவற்றுக்குரிய கதைகள் என்பன இந்தக் கல்விப் பகுதியில் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டு இருக்கும். என்பதை பாலவிஹாஸ் ஆசிரியர்களுக்கு அறியத் தருகிறோம். எனவே தொடர்ச்சியாக இறைதூதனை வாங்கி தேவையான குறிப்புக்களை சேர்த்துக் கொள்ளவும்.

தொகுத்தளிப்பவர்:-
**திருமதி சி. இரவீந்திரன்**
தேசிய பாலவிஹாஸ் இணைப்பாளர்

# ஒவ்வொரு யோகத்தின் சிறப்பையும் விளக்கும் கதைகள்:

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டு நான் அதைச் செய்கிறேன் இதுவே எனது சாதனா மார்க்கம் இதற்கு மேல் நான் உங்களுக்கு ஒன்றும் சொல்ல இயலாது. நீங்கள் மிதிலாபுரிக்குச் செல்லுங்கள். அங்கு ஒரு சந்தில் கசாப்புக் கடை வைத்து நடத்தும தர்மவியாதனிடம் கற்றுக கொள்ளுங்கள் என்று கூறினாள்.

அவ்வந்தணன் மிதிலாபுரிக்குச் செல்கிறான். அங்கே தர்மவியாதனின் கசாப்புக் கடைக்கு வருகிறான். அவ்விடம் மிகவும் அருவருக்கத்தகுந்த இடம். அங்கு தர்மவியாதன் மாமிசத்தை வெட்டிக்கொண்டும், விற்றுக் கொண்டும், வாடிக்கைக்காரர் களிடம் பேசிக் கொண்டும் இருப்பதைக் கண்டான். இவ்வாறு செய்து கொண்டே தர்மவியாதன் பிராமணனை ஏறிட்டு நோக்கினான். பிராமணன், இந்த இடத்துக்கு அந்தப் பெண் ஏன் தன்னை அனுப்பினாள்.

அதுவும் ஆன்மீக உண்மைகளைக் கற்றுக்கொள்ள இந்த மனிதனிடம் ஏன் அனுப்பினாள் என்று குழப்பமடைந்தான் தர்மவியாதன் அவனை நோக்கி, "மதிப்பிற்குரிய அய்யா, தயவு செய்து அங்குள்ள இருக்கையில் அமருங்கள். என்னுடைய வேலையை சீக்கிரம் முடித்து விடுகிறேன். அந்தப் பெண்மணி என்னைப் பார்க்கும்படி கூறி தங்களுக்கு மிகவும் சிரமம் கொடுத்துவிட்டாள். எனது வேலையை முடித்துக்கொள்கிறேன். பிறகு நாம் வீட்டுக்குச் செல்லலாம்" என்றான். இதைக் கேட்டதும், பிராமணன் பேச்சிழந்து நின்றான். இந்தக் கசாப்புக்கடைக்காரன் எல்லாமறிந்தவன் போலக் காணப்படுகிறான். என்னைப்பற்றி எல்லாம் அவனுக்குத் தெரிகிறது" என்று நினைத்தான்.

வீடுவந்து சேர்ந்ததும், தர்மவியாதன் பிராமணனை உட்கார்த்திவிட்டு, தனது வயதான பெற்றோருக்குப் பணி விடைகள் செய்து, உணவளித்து, அவர்கள் ஓய்வெடுக்கச் சென்றபின், அந்தணனுக்கு பழுங்கள், பால் இவை கொடுத்து உபசரித்தான். பிராமணன் ஆன்மீகக் கருத்துக்களை அவனிடம் விவாதிக்கத் தொடங்கினான். தர்மவியாதனின் ஆழ்ந்த ஞானத்தைக் கண்டு அதிசயமுற்றான். பிறகு பிராமணன் தன்னைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

இவ்வளவு காலத் தவத்துக்குப் பிறகும் அவன் மாறவில்லையே. ஒரு கொக்கின் செயலைப் பொறுக்க முடியாமல் அவன் கோபத்துக்கு அடிமையானான். பிட்சையிடுவதில் சிறிது நேரத் தாமதம் அவனால் பொறுக்க முடியவில்லை. கர்வத்துக்கு அடிமையானான். அவனுடன் ஒப்பிடுகையில் படிக்காத அந்தப் பெண்மணியும், தாழ்ந்த ஜாதியில் உள்ள கசாப்புக்கடைக்காரனும், ஆன்மீகத்தில் எவ்வளவு உயர்ந்தவர்கள். கர்மயோகத்தின் மூலம் அவர்கள் ஜீவன்முக்தர்களாகி விட்டார்கள். அன்றாட வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் போதே, அவர்கள் மனம் கடவுளை நினைந்திருந்தது. தானோ கடமைகளை விடுத்து வீட்டை விட்டு ஓடிவந்து, பெற்றோரை மறந்து, துறவு வாழ்க்கையை நாடினான். அதனால் என்ன பயன்? கடைசிவரையில் சினத்துக்கும் கர்வத்துக்கும் அடிமையாகவே இருந்தான்.

இல்லத்தரசிக்கு, கணவனே கடவுள். தர்மவியாதனுக்கு, அவன் பெற்றோரே நடமாடும் தெய்வங்கள். அவர்கள் வீடுகளே கோயிலாக மாறின. கர்மயோகத்தின் மூலம் வாழ்க்கையைப் புனிதப்படுத்திக் கொண்டார்கள். இவ்வாறாக அவ்வந்தணன் அறிந்துகொண்டான்.

**பக்தியோகம்:**

பாபா ஒருமுறை கீழ்க கண்ட கதையைக் கூறினார். ஞானதேவரும், நாமதேவரும் ஒரு முறை புனித யாத்திரை சென்றார்கள். ஞானதேவர் பக்தராக இருந்தாலும், ஞானமார்க்கத்தில் அதிகம் ஈடுபட்டார். நாமதேவர் உணர்ச்சிகள் மிகுந்தவர். அவர் மிகவும் பக்தியில் ஈடுபட்டவர். பண்டரிபுரவிட்டல விக்ரகந்தான் அவருக்குச் சகலமும். அதுவே அவருக்குத் தாய், தந்தை மற்றும் எல்லாம்.

அவர்கள் பல இடங்களுக்குச் சென்றார்கள். ஒருநாள் அவர்கள் மிகவும் களைப்படைந்து தாகமுற்றார்கள். வழியில் ஒரு கிணற்றைக் கண்டார்கள். மிகவும் ஆழத்தில் சிறிது தண்ணீர் இருந்தது. மற்றபடி அது வறண்டிருந்தது. தாகத்தைத் தணிக்க அந்தத் தண்ணீரை எவ்வாறு வெளியே கொண்டு வருவது? பாத்திரம், கயிறு, வேறு எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

ஞானதேவர் தியானத்தில் அமர்ந்தார். யோகசக்தியால் தன்னை ஒரு பறவையாக மாற்றிக் கொண்டு, கிணறுக்குள் சென்று, தண்ணீரைக் குடித்து தாகத்தைத் தணித்துக்கொண்டு பறந்து வெளியே வந்து, மனிதவுருவமாக மறுபடி மாறினார்.

நாமதேவர் அத்தகைய முதிர்ந்த யோகியல்ல. யோகசித்திகளும் அவர் அதிகம் பெறவில்லை. அவரால் கதறியழ முடியும். விட்டலனை உதவிக்கு அழைக்க முடியும் விட்டலனைக் கூவியழைத்து அழுதார். கிணற்றுத் தண்ணீர் மேலே பெருகிவந்தது. கிணற்று உச்சிவரை வந்தது. நாமதேவர் கையை நீட்டி தண்ணீரை முகந்து பருகினார். இதைக் கண்டு ஞானதேவர், பக்தியின் பிரபாவத்தை நன்கு உணர்ந்து கொண்டார். அது மற்ற யோகங்களுக்குச் சிறிதும் தாழ்ந்ததல்ல என்றும் அறிந்தார்.

**ஞானயோகம்:**

இதுவும் நாமதேவரைப் பற்றிய கதை. நாமதேவர் விட்டல பக்தர். சிலையிலுள்ள விட்டலன் அவருடன் பேசுவதுண்டு. அவரளித்த உணவைக்கூட ஏற்றுக் கொள்வார். அவரது குரல் மிகச் சிறந்தது. கீர்த்தனைகள் பல இயற்றினார். அவர் பாடல்கள் பலரை மிகவும் கவர்ந்தன.

அவர் காலத்தில், அநேக விட்டல பக்தர்கள் வாழ்ந்து வந்தனர். சௌதாமாலி (தோட்டக்காரர்) பணிப்பெண் ஜனாபாய், தட்டான் நரகரி சோனார், நாவிதர் சேனா, தாழ்ந்த ஜாதியரான சோகா மேளா, குயவர் கோரா, நிவிருத்தி நாதர், ஞானேஸ்வரர், சோபன்தேவ், முக்தாபாய் போன்றவர் வாழ்ந்தவனர்.

ஒரு சமயத்தில் தற்செயலாக அவர்கள் எல்லாரும் சந்தித்தார்கள். நாமதேவர் நெருங்கி வந்தபோது, எழுந்திருந்து எல்லோரும் அவரை வரவேற்று, விட்டலனின் அத்யந்த பக்தர் என்று புகழ்ந்தார்கள். வயதில் சிறிய முக்தாபாய் மட்டும் எழுந்திராது. நாமதேவர் ஏதோ சாதாரண மனிதர் என்பது போல நடந்து கொண்டார். ஞானதேவருக்கு வெட்கமாகவும் அவமானமாகவும் இருந்தது. பெரும் பக்தரிடம் மரியாதையில்லாமலும் இங்கிதமில்லாமலும் நடந்து கொண்டதற்குக் கடிந்து கொண்டார். நாமதேவர் கச்சா மனிதர் முழுமையாக வேகாத பானை போன்றவர் என்றாள் முக்தாபாய். அவளது துடுக்கான வார்த்தையால் சகோதரர்கள் எரிச்சல் அடைந்தார்கள். நான் கூறியது சரியாதவறா என்பதை கோரா மாமா சரிபார்த்துச் சொல்லட்டும் என்று கூறினாள் முக்தா. குயவர்கோரா, ஒவ்வொருவரின் ஆன்மீகத்தரத்தையும் கண்டறியும் படி எல்லோரும் அவரைக் கேட்டனர். கோரா ஒவ்வொருவரின் தலையையும் பானையைத் தட்டுவது போலத் தட்டிப்பார்த்தார். ஒவ்வொருவரும் முழுமையாக வெந்தபானையென்றும், ஆன்மீகத்தில் நன்கு மலர்ந்து கனிந்தவர் என்றும் கூறினார். விட்டலரின் மிக அருமந்த பக்தராக இருந்தாலும் நாமதேவர் முழுமையாக வேக வில்லை என்று கூறினார். முக்தா அலட்சியமாக இருந்ததும் அவளது மதிப்பீடும் பொருத்தமானது என்றார்.

நாமதேவருக்கு மிகுந்த அதிர்ச்சியும், நிராசையும் ஏற்பட்டன. கோரா கூறினால் அது சரியாகத் தானிருக்கும் அவரது தீர்ப்பில் தவறிராது. விட்டலரின் கோயிலுக்கு ஓடிச்செல்கிறார். நாமதேவர். தனக்கு நல்வழி காட்டும்படி பிரபுவிடம் அழுது கொண்டே பிரார்த்திக்கிறார். விட்டோபா, தொலைவிலுள்ள, கிராமத்தில் உள்ள விசோபா கேச்சாரிடம் ஆத்மஞானம் பெற்றுக்கொள் என்று கூறினார். விசோபாவைத் தேடிச்செல்கிறார் நாமதேவ். கிராமத்துக்குள் நுழைந்ததும், அவரைப்பற்றி விசாரித்தார். கோயிலில் எங்காவது தூங்கிக் கொண்டிருப்பார் என்று கூறினார்கள். கோயிலுக்குள் நுழைந்ததும், மிகவும் வயதான ஒருவர் சிவலிங்கத்தின் மேல் காலைப்போட்டுக் கொண்டு தூங்குவதைக் கண்டார். நாமதேவர் திடுக்கிட்டார்! என்ன அக்கிரமம்! விட்டலன் இந்த மூடரைக்கான அனுப்பினாரே என்று நொந்தார். இறைவனும், கர்வம் பிடித்த முக்தாவைப் போல் நடந்து கொள்கிறார். அந்த முதியவரைக் குலுக்கி எழுப்பினார். எங்கு காலை வைத்துக்கொள்கிறீர் என்று தெரியாதா? கடவுளின் இருக்கையைத்தவிர கால்களை வைத்துக் கொள்ள வேறிடம் கிடைக்கவில்லையா? முதியவர், தளர்ந்த குரலில் மெதுவாகக் கூறினார். மன்னியுங்கள். என்னால் சரியாகப் பார்க்க முடியவில்லை. நான் கால்களைக்கூட நகர்த்த இயலாமல் பலவீனமாக இருக்கிறேன். சிவலிங்கத்திலிருந்து என் கால்களைத் தள்ளி நகர்த்தி வைக்க உதவி செய்யுங்கள், என்று கேட்டுக்கொள்கிறார். நாமதேவர் சினத்துடனும் எரிச்சலுடனும் சிவலிங்கத்திலிருந்து அவர் கால் களை விலக்கினார். சிவலிங்கமோ அவர் கால்களை விட்டு நகர மறுக்கிறது. அவரது கால்களுடன் கூடவே நகர்கிறது. நாமதேவர் பேச்சிழந்து நின்றார்.

நாமதேவருக்கு அறிவும் ஞானமும் பளிச்சிட்டன. விட்டலன் இருக்குமிடம் பண்டரிபுரம் மட்டுமல்ல. எங்கும் பரந்துள்ள இப்பிரபஞ்சத்தில், அவரது இருக்கை இல்லாத இடம் ஏது? இறைவன் எல்லாரினுள்ளும் காணுதல், எல்லாவிடங்களிலும் காண்டல், இறைவனுக்குள் எல்லாரையும் காண்டல் இதுவே ஞானம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஆன்மீகத்தில் கட்டுப்பாடும் சுதந்திரமும்

ஆன்மீகம் என்றால் என்ன? இறைவனை சதா நினைத்துக் கொண்டிருத்தல் ஆன்மீகம் அல்ல. வாழ்க்கையில் மனித மேம்பாடுகளை கடைப் பிடித்து வாழ்வதே ஆன்மீகம். உண்மையில் ஆன்மீகம் என்பது புலன் அறிவை எல்லாம் கடந்து நிற்பதாகும். சுவாமி விவேகானந்தர் கூறுவார். அந்தராத்மாவின் ஆற்றலை உணர்ந்தபின் நீக்க முடியாத தேவையும் துன்பமும் எதுவும் இல்லை. சுதந்திரம் என்பது தேவைகளையும் துன் பங்களையும கடந்து நிற்கும் நிலையை குறிக்கும். அந்த நிலைக்கு எம்மை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த நிலைக்கு எம்மை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டு மாயின் கட்டுப்பாடு என்பது அவசியமாகின்றது. ஆன்மீக வாழ்க்கையிலும் சரி உலகியல் வாழ்க்கையிலும் சரி கட்டுப்பாடு என்பது ஒரு இன்றியமையாத இடத்தினை வகிக்கின்றது.

கட்டுப்பாடின்றி முன்னேற்ற மில்லை. ஐம்புலன்களையுமே அடக்குவதே கட்டுப்பாடு. கட்டுப்பாடானது எங்களுக்கு நாமே போட்டுக்கொள்கின்ற பாதுகாப்பு அரண். புடலங்காய் நேராக வளரவேண்டும் என்பதற் காக கல்லினை கட்டுகின்றோம். புடலங்காய்க்கே கல்லினை கட்டுகின்றோமென்றால் மனிதனாகிய நாம் நேராக வளர்வதற்கு / வாழ்வதற்கு கட்டுப்பாடு அவசியந்தானே, இன்று இளைஞர்களும் சரி பெரியவர்களும் சரி சுதந்திர மென்று எதைக் கருதுகிறார்கள்; பிறர் தாங்கள் செய்ய நினைப் பதை இடையூறு செய்யாது இருக்கவேண்டும் என்பதையே சுதந்திரமென கருதுகிறார்கள். ஆனால் சுதந்திரமென்பது என்ன? புலன்களை அடக்குதல். ஒருவர் பூரண சுதந்திரமாக இருக்கும் போதுதான் நான் நானாக வெளிப்படுதல் என்பது சாத்தியமாகும். நான் நானாக வெளிப்படும போதுதான் நல்ல சிந்தனைகள், ஆளுமை இயல்புகள், கலைத்திறமைகள், ஆக்கபூர்வமான செயலகளில் ஈடுபடுதல் என்பன இயல்பாக உள்ளத்திலிருந்து ஊற்றெடுக் கும்.

**செல்வி S. சர்மிளா**

ஆத்ம தரிசனம் பெற்ற ஒருவனுடைய உணர்வு தான் முழுமையானதாகவும் ஒருமையானதாகவும் இருக்கும். பகவான் அவற்றுக்கான பாதைகளை எமக்கு அமைத்து தந திருக்கின்றார். சிறுவயதிலே ஆன்மீக உணர்வை ஊட்டு வதற்கு பாலவிகாஷ் கல்வித் திட்டம், இளைஞர்களுக்கு ஆன்மீக உணர்வை ஊட்டு வதற்கு தலமைத்துவம், மனித மேம்பாட்டுக்கல்வி, பெற்றோரியல், Educatre கல்வி திட்டம் இவை எல்லாம் நான் நானாக வெளிப்படுவதற்கு சுவாமி அமைத்தத் தந்த பாதைகள்.

இன்று மனிதன் உலகியல் மாயையில் சிக் குண்டு தன் உண்மை நிலையை மறந்து வாழ்கின்றான். விவேகானந்தர் சொல்வார் பன்றி சேறு உள்ள இடங்களை நாடித்தான் செல்லும் தேவதை ஒன்றை கொண்டு வந்து பன்றிக்கு முன் விட்டாலும் பன்றிக்கு தேவதையை தெரியாது அதே போல் தான் மனிதனும் மாயையில் சிக் குண்டு இருக்கும் போது எம் முன் இறைவன் வந்து நின்றாலும் எமக்கு தெரியாது. நாம் வாழ்கின்ற வாழ்க்கை இந்த உலகியல் மாயையில் சிக் குண்டு வாழும் வாழ்க்கை சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். மிகவும் பலவீனமானவர்கள் முதல் எல்லோரும் மரணமில்லாப் பெருமை மிகு வாரிசுகள் என்றோ அவர்களுக்கு உபதேசம் செய்யுங்கள். குழந்தைப் பருவத்தில் இருந்தே மனிதர்களின் மனிதில் நல்ல ஆக்க பூர்வமான, உறுதியான உதவுகின்ற எண்ணங்கள் தோன் றட்டும் இப்படிப்பட்ட உறுதியான எண்ணங்களுக்கே உங்கள் மனதில் இடம் கொடுங்கள். உங்கள் சக்தியைப் பறித்து உங்களை பலவீனமாக்கும் எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். நானே பரம்பொருள், நானே பரம்பொருள் என்று உங்கள் மனதிற்கு எப்போதும் சொல்லுங்கள் இரவு பகலாக அந்த எண்ணம் ஒரு பாடலாக ஒலித்துக் கொண்டிருக் கட்டும். மரணத்தின் தறுவாயில் கூட நானே பரம் பொருள் என்று கூறுங்கள்! முழங்குங்கள் அதுதான் உண்மை எல்லையற்ற சக்தி உங்களுக்கே சொந்தமானது. உங்கள் மனதை மறைத்துக் கொண்டிருக்கின்ற மூட நம்பிக்கைகளை விரட்டியடியுங்கள். நாம் துணிவுடன் இருப் போம், உண்மையை அறிவோம் உண்மையே கடைப் பிடியுங்கள். குறிக்கோள் தூரத்தில் இருக்க லாம். ஆனால் விழித்திருங்கள் எழுந்திருங்கள் இலட்சியம் அடையும்வரை காத்து நிற்காதீர்கள்.

ஜெய்சாயிராம்.

### இதயத்தில் இறைவன்

இவ்வுடலை நீ துறந்து விடவேண்டும் என்பதல்ல. உன் கடமையை நீ செய்யக் கூடாது என்பதும் அர்தமல்ல. எல்லாவிதமான கடமைகளையும் செய்து; சமுதாயத்தில் வாழ்ந்து; சமுதாயத்தில் ஒரு அங்கமாக வாழ்க்கை அமைத்துக்கொண்டு; இதயத்தில் இறைவனை விடாமல் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

**- பகவான் பாபா -**

## ஆன்மீகத்தில் கட்டுப்பாடும்......

(5ஆம்பக்கத் தொடர்ச்சி)

அப்போது நாம் எமது பண்பாடு கலாச்சாரம் என்பவற்றின் ஊடாக நாம் மனித குல உயர்குண நலன்களை வாழ்வில் கடைப்பிடித்து சில விதிமுறைகளையும் ஒழுங்கு முறைகளையும் நாம் கடைப்பிடித்தால் எமது ஆன்மீக முயற்சியானது வெற்றியளிக்கும்

இன்றைய சமுகத்தில் பலர் பலவிதமான சூழ்நிலைகளி னால் இளைஞர்களினுடைய சிந்தனை சிதறடிக்கப் படக் கூடிய சந்தர்ப்பங்களும் வாய்ப் புக்களும் கூடுதலாக இருக் கின்றன. அத்தகைய சூழ் நிலையில் அவற்றி லிருந்து எமக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் எமக்கென நாம் சில விதிமுறை களை வகுத்து அந்த வரையறைக் குள்ளேயே நாம் செயற்பட்டு கொண்டே இருப் போமே யானால் அங்கு ஆன்மீகம் என்பது மிகவும் இலகு வானதாகவும் விரும்பத் தக்க ஒன்றாகவும் அமையும். இத்தகைய கட்டுப்பாடுகளுக்கும் எமது சுதந் திரங்களுக்கும் ஊடாக நாம் முயற்சியில் முன்னேறிக் கொண்டு சென்றால் இறுதியில் உன்தை நிலையின் தெய்வீக நிலையை நாம் அடைந்து கொள்ள முடியும்.

ஜெய்சாயிராம்

# இனிப்பான இனிமையிலே.....

சோம்பியிருப்பதனால் ஆவதென்ன மானிடனே
வெற்றி புறமுதுகிட்டு ஓடும்
தோல்வி உன்னைப் பார்த்து இதழ் விரிக்கும்
உறவினர் கூட்டம் கெக்கரிக்கும்
ஊரும் பார்த்து சிரிக்கும்
உன் உதடும் விம்மி வெடிக்கும்
உன் வாழ்வும் கலை இழக்கும்
விடலாமா..? மானிடனே..?
கூடாது மானிடனே கூடாது
பகுத்தறிவில்லா ஜீவன்கலை எண்ணிப்பார்
பக்குவமாய் உன் மனதில் போட்டுப்பார்
வீசும் காற்று ஓய்வதில்லை பார்
அது ஓய்ந்துவிட்டால் பாரினில் உயிரில்லை பார்
நித்தமும் இதழ்விரிக்கிறான் அந்த(ப்) பகலவன்
அவன் ஓய்துவிட்டால் இவ்வுலகம் இருட்டினிலே
நீமட்டும் வீறுகொண் டெழுந்திடின் - முயற்சியிலை
உன் மனம் உச்சாக நினைவினிலே
உன் முகம் அழகான சிரிப்பினிலே
உன் வாழ்வு இனிப்பான இனிமையிலே

நவாலியூர் ராஜலட்சுமி

## ஒவ்வொரு யோகத்தின் சிறப்பையும்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ராஜயோகம்:**

ராஜயோகத்தை, யோகங்களின் அரசன் என்று கூறலாம். இருந்தாலும் பக்தியோகமும், ஞான யோகமும் அதற்குத் தாழ்ந்ததல்ல.

சங்கதேவர் என்பவர் ஹடயோகி. மரணத்தை வென்றவர் என்று கூறுவார்கள். ஞானேஸ்வரர், அவரது சகோதரர்கள், சகோதரி ஆகியோரது பக்தியாலும் ஞானத்தாலும் அவர் கவரப்பட்டார். ஞானதேவரின் தீவிர சீடராக மாறினார்.

இவ்வாறு ஒவ்வொரு யோகமும் தன்னளவில் ஒப்பற்றது. அனைத்து யோகங்களின் இலட்சியமும் ஒன்றே. முடிவில் ஒவ்வொரு யோகமும் மற்றதனுடன் இணைந்து, அதன் வேற்றுமையை இழக்கிறது. மனிதனைப் பூரணமாக்குவது, யோகத்தின் இலட்சியமாகும். இயல்பில் தெய்வீகமாக மாறவேண்டும் என்பதும் யோகத்தின் இலட்சியமாகும்.

நன்றி தெய்வீகப்பாதை

## மருத்துவமூலம் ஆத்மீக..........

Iம் தொடர்ச்சி

### 1. Globalisation

**உலகமயப்படுத்தல்**

அதாவது மருத்துவ கவனிப்பு அல்லது மருத்துவ சிகிச்சை என்பது ஒருவருக்குரிய பிறப்புரிமை. எனவே உலகின் எந்த இடத்திலும் எவருக்கும் இந்த சிகிச்சை மறுக்கப்படாது, கிடைக்கப்படவேண்டும். சுவாமியின் மருந்துவமனைகளில் உலகின் எந்தப் பாகத்தில் இருந்து வருபவர்களும் இலவச மருத்துவ சிசிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 2) Decommercialisation

மருத்துவ சேவை வர்த்தகமயமாக்கப்படுதலை தவிர்த்தல். இந்த சேவை விலைபேசி சந்தையில் விற்கக்கூடிய ஒன்றல்ல. அது ஒரு புனிதமான சேவை என்பதை உணர்த்த சுவாமியின் மருத்துவ மனைகளில் முற்று முழுதாக இலவச மருத்துவ சேவை வழங்கப்படுகிறது.

3) மருத்துவ சேவையில் உள்ளவர்கள் மனித விழுமியங்களை கடைப்பிடித்து அன்புடனும் சகிப்புத்தன்மையுடனும் தமது கடமையை சேவையாக செய்ய அவர்களில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.

இந்த முறைகளின் மூலம் மருத்துவ சேவையை ஒரு ஆத்மீக சேவையாக செய்து எம்முள் மாற்றத்தை ஏற்படுத்தி தெய்வீகத்தை உணர வேண்டும்.

## இளைஞர்களின் அகத் தடையை நீக்க

(IIம் தொடர்ச்சி

1) தன்னம்பிக்கை வளர்க்கப்பட வேண்டும்

2) அறியாமை அகற்றப்பட வேண்டும்.

3) முயற்சி முன்னேற்றம் என்பன ஊக்குவிக்கப்பட வேண்டும்

4) ஆன்மீகம் மூலம் மனித உன்னதம், கல்வி உன்னதம், திறமை உன்னதம் மூன்றும் உருவாகும் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

5) ஆனந்தம், மகிழ்ச்சி ஆன்மீகத்தில் உள்ளது என்று காட்டப்பட வேண்டும்

6) பெற்றோரியல் தலைமைத்துவம் என்பவற்றில் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

7) கட்டுப்பாட்டில் சுதந்திரம் கிடைக்கிறது என்ற உண்மை உணர்த்தப்பட வேண்டும்.

**புறத்தடைகளை நீக்க**

1) நிலையங்களில் பங்குபற்ற வாய்ப்பு கொடுத்தல்

2) சமூகத்தடையை நீக்க நாம் முதலில் மாற வேண்டும் பின்பு சுவாமி மாற்றுவார்.

**சாயி நிலையத்துக்கு வெளியிலுள்ளவர்களை உள்ளிழுக்க உள்ளிருப்பவர்களைத் துரிதப்படுத்த பின்வருவன கவனிக்கப்பட வேண்டும்.**

1) தரமான பஜனை

2) வீட்டு பஜனை - இளைஞர்கள் ஈடுபடுத்துதல்

3) சேவைத்திட்டங்களில் இளைஞர்களை ஈடுபடுத்துதல்.

4) ஆன்மீக சாதனைகளை ஊக்குவித்தல்

5) பொது விசயங்களில் அவர்களுடன் அளவளாவுதல்

1) ஞாபக சத்தியை கூட்ட

2) பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த

6) பாடசாலைகளில் தலைமைத்துவ பயிற்சி அளித்தல்

7) கண்காட்சிகள் நடாத்துதல்

8) நாம் அவர்களுக்கு முன் மாதிரியாக இருத்தல்

9) ஆன்மீக ரீதியில் ................ மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று அவர்களுக்கு காட்டுதல்.

***

இப்பத்திரிகை மானிப்பாய் பகவான்ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினால்
கே.கே.எஸ்.வீதி, பூநாறிமரத்தடி, ஸ்ரீ சாயி அச்சகத்தில் அச்சிடப்பெற்று 01-12-2002 வெளியிடப்பட்டது.

# தேசிய சேவை மகாநாடு தொகுப்புரைகள்

## மருத்துவ மூலம் ஆத்மீக சேவை

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா எம்முள் உள்ள தெய்வத் துவத்தை நாம் உணர்ந்து கொள் வதற்கு எமக்குள் மாற்றம் தேவை (Transformation) என்று கூறு கிறார். இந்த நிலைமாற்றத்தை நாம் மூன்று மார்க்கங்க ளில் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறுகிறார்.

1) S - Seva தன்னலமற்ற சேவை.
2) A - Adoration - (பக்தி - பிரார்த்தனை.
3) I - Ilumination - ஞானம்.

சத்திய சாயி நிறுவனத்தில் சேவை வெறும் செயலல்ல அது ஒரு சாதனை சேவையின் விளை வாக நிலைமாற்றம் ஏற்படப்படு கின்றது.

நாம் சேவை செய்யும் போது நம் சேவையின் அளவு முக்கியமல்ல. நாம் செய்த சேவை எமக்குள் ஏற்படுத்திய மாற்றம் தான் இங்கு முக்கிய மானது.

சுவாமியின் சேவைத் திட்டத்தின் மருத்துவமூலமான சேவையும் ஒன்றாகும். (Medi-care) இந்தச் சேவையை நாம் மருத்துவக் கவனிப்பு தேவைப் படும்போது, நோயாளர்கள், முதி யோர்கள் போன்றவர்களுக்கு வழங்குகின்றோம். மருத்துவ கவனிப்பு தேவைப்படுவோர் மூன்று நிலைகளில் பாதிப்புற்றவர்களாக இருக்கிறார்கள்.

1) உடல் ரீதியாக
2) உள ரீதியாக
3) சமூக ரீதியாக

இந்த மூன்று நிலைகளிலும் இவர்களுக்கு உதவி தேவைப் படுகின்றது.

இப்படிப் பாதிப்புக்குள்ளாகி இருப்பவர்களை நாம் அனுகும் போது அவர்கள் தமக்கு ஏற் பட்டுள்ள தாக்கத்தின் காரணமாக இறைவனைப் பற்றி சிந்திக்க முனைவார்கள். இறைபக்தி இல் லாதவன் இறைவனை சிந்திக்கத் தொடங்குகின்றார். இறைபக்தி உள்ளவர்கள் மேலும் கூடிய இறைபக்தி நிலையில் இருப்பார் கள் எனவே இப்படிப்பட்டவர்களை நாம் அனுகும்போது எம்முள் பக்தியின் பெறுமதி உணரப்படு கின்றது.

அதே நேரத்தில் இவர் களில் சிலர் இறப்பை எதிர்நோக்கி இருப்பார்கள். அவர்களை நாம் அனுகும்போது இறப்பு தவிர்க்க முடியாத ஒன்று என்ற சத்தி யத்தை எமக்கு உணர்த்து கின்றது. ஆதாவது இந்த உலகின் நிலையாமை உடலின் நிலையாமை உணரப்பிடுகின்றது. எம்முள் ஒரு சத்தியம், அதாவது ஞானம் உணரப்படுகின்றது.

> ***Dr. செல்வி***
> ***சிவராணி சிவசோதி***
> தலைவர்
> சததிய சாயி சேவா நிலையம்
> மானிப்பாய்.

இப்படிப்பட்ட நோயாளர் களை அணுகி சேவை செய்யும் போது ஒரே நேரத்தில் நாம் பக்தி மார்க்கம், கர்மமார்க்கம், ஞான மார்க்கம் என்ற மூன்று மார்க்கங்களின் பெறுமதியையும் உணரக்கூடியதாக இருக்கிறது. இதன் மூலம் எம்முள் மாற்றம் ஏற்பட வழி பிறக்கிறது.

### மருத்துவமூலமான சேவை Hospital Visits:

மருத்துவமனைகளுக்குச் சென்று அங்குள்ள நோயாளர் களுடன் கதைத்து அவர்களின் பிரச்சினைகளுக்கு எம்மால் இயன்ற உதவிகளை வழங்குதல்.

உண்மையில் நோயாளர் கள் தமது நோயின் காரணமாக உடல், உள சமூக நிலையில் பாதிக்கப்பட்டிருக்கும்போது அவர் களுக்குள் எதிர் மறையான எண்ணங்கள் (Negative thougths) உருவாகின்றன. இந்த எண்ணங்கள் உடலில் உள்ள அகச் சுரப்பிகளை தூண்டுவதன் மூலம் உடல் நிலையை மேலும் பாதிப்படையக் கூடிய சில பாதகமான சுரப்பிகளைச் சுரக்கச் செய்கின்றன. இதனால் அவர் களின் நோய் நிலை மேலும் மோசமாகின்றது இந் நிலையில் நாம் அவர்களின் நிலமையில் குறுக்கிட்டு அவர்களுக்கு உடல்உள சமூக ரீதியான உதவிகளை வழங்கும் போது அவர்களுக்கு நேர்மறை யான எண்ணங்கள் (Postive thoughts) உருவாகின்றன. இந்த எண்ணங்கள் உடலில் உள்ள வேறு சில சுரப்பிகளைத் தூண்டி உடல் நிலையை குணமாக்கக் கூடிய சில சுரப்பிகளைச் சுரக்கச் செய்கின்றன. இதனால் நோய்கள் மிக விரைவில் குணமடையும் நிலை உருவாகின்றது.

உடலின் குணமாகும் சக்தி எம்முள் உள்ள பிரேமையென்ற ஆத்மீக சக்தியால் இதனாலேயே ஆத்மீக சக்தியை உணர்ந்த மருத்துவர்கள் "Surgeon Cuts But God heals" என்று கூறுவார்கள். சுவாமியின் மருத் துவர்கள் மகா நாட்டில் "நான் குணமாகுகிறேன் ஆனால் நீங்கள் வில் (Bell) போடுகிறீர்கள் என்று நகச்சுவையாக கூறியுள்ளார் பாபா.

### 2) இரத்ததானம்

ஒருவரின் உயிரைக் காப்பாற்ற இரத்தம் வழங்குவது என்பது ஒரு மகத்தான சேவையாகும். உன்மையிலே தியாகத்தில் வெளிப்பாடு ஒருவருக்கு இரத்தம் தேவைப் படும்போது அதற்கு மாற்றீடாகக் கொடுக்கக்கூடிய வேறு ஒரு பதார்த்தமோ பொருளோ இல்லை. எனவேதான் இரத்ததானம் மிகப் புனிதமான ஒரு சேவையாகும். இதை சுவாமி "Liquid Love" என்றும் கூறியுள்ளார். இதனால் தான் பாபா உலகளாவிய இரத்த தான தினத்தை பிரகடனப் படுத்தி அதன் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளார்.

### 3) முதலுதவிப் பயிற்சி அளித்தலும், முதலுதவி வழங்குதலும்

ஒவ்வொரு சாயி சேவா தள உறுப்பினர்களும் சாயி இளைஞர்களும் முதலுதவிப் பயிற்சி பெற்றிருப்பதுடன் அதை தேவைப்படும் இடத்தில் வழங்கு வதற்கும் தயாராக இருக்க வேண்டும். முதலுதவி சிகிச்சையை உரிய நேரத்தில் சரியான முறைப்படி கொடுப்பதன் மூலம்,

1) உயிரிழப்பைத் தவிர்க்கலாம்.
2) மிகமோசமான நிலைக்குச் செல்லவிடாது தடுக்கலாம்.
3) விரைவில் குணமாகக்கூடிய நிலையை உருவாக்கலாம்.

### 4) இலவச மருத்துவ முகாம் அமைத்தல்

உலகில் மருத்துவம் மிக முன்னேறி நவீன மருத்துவ வசதி மருத்துவ திறமைகள் மேலோங்கி யிருந்தும், இந்தச் சிகிச்சை முறைகள் சாதாரண ஒரு மனிதனுக்கு கிடைக்க முடியாத அளவுக்கு மிக தொலைவுக்கு சென்று கொண் டிருக்கின்றன. பணம் படைத்த வர்கள் மட்டுமே நவீன சிகிச்சை பெறலாம் என்ற நிலைக்கு அவை சென்று கொண்டு இருக்கின்றன. இதனால் சாயி இலவச மருத்துவ முகாம்கள் வசதி குறைந்த மக்களுக்கு வசதிகள் கிடைப் பதற்கு மிக இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

5) மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் மற் றும் உதவியாளர்கள் இவர் களுக்கு மனித விழுமியங் களின் முக்கியத்துவத்தை உணர்த்து வதன் மூலம் தமது கடமையை சேவையாகச் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்துதல்.

இதற்காக சுவாமி இரண்டு அதி நவீன மருத்துமனை களையும் இரண்டு பொது மருத்துவமனைகளையும் நிறுவி யுள்ளார். அங்கு மருத்துவ சேவை வழங்குவதன் மூலம் மருத்துவ சேவையில் காணப்பட வேண்டிய பின்வரும் விடயங்களை உலகிற்கு தெளிவு படுத்து கின்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய சேவை மகாநாடு தொகுப்புரைகள்

## இளைஞர் எதிர்நோக்கும் சவால்கள்

இன்றைய இளைஞர்களே வருங்கால சந்ததியினர் ஆவர். அவர்களே வருங்காலத்தில் சமூகத்தலைவர்களாக இருப்பர். எனவே இளைஞர்களுக்கு சரியான வழியைக் காட்டுவது, ஆன்மீகப் பாதையை காட்டுவது எமது கடமை.

இளைஞர்களில் பலர் உலகாயதமாக உள்ளனர். சிலர் ஆன்மீக நிலையங்களில் உள்ளனர். இந்த நிலையங்களிலிருந்த துரதிஷ்டசாலிகளான சிலர் இந்நிலையங்களிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். நாம் வெளியில் உள்ளவர்களை உள்ளிழுக்க உள்ளிருப்பவர்களை துரிதப்படுத்தி ஆன்மீக பாதையில் செல்ல வழிகாட்ட வேண்டும்.

### இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

1) போர்க்கால சூழ்நிலை

இதனால் இவர்கள் இனத்தவர் இழப்பு, பொருள் இழப்பு, இடப்பெயர்வு, நிச்சயமற்ற தன்மை போன்றவற்றால் பாதிக்கப பட்டுள்ளார்கள்.

2) பொருளாதார நெருக்கடி

3) பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் எடுக்க வேண்டும் என்ற அழுத்தம்.

4) ஊடகவியல் கவர்ச்சிகரமான தகவல்களைக் கொடுப்பதன் மூலம் இவர்களைக் குழப்புகிறது.

**உ-ம்: விளம்பரங்கள்**

5) ஆன்மிகத்தில் முன்மாதியான ஆட்கள் இல்லாமை சிந்தனையில் தெளிவில்லாது இருத்தல்.

7. தேசிய கல்வித்திட்டம்: இக் கல்வித்திட்டத்தில் **G.C.E.A/L** பரீட்சையே அவர்களின் சமூக ஒளியாகவும் தொழில்வாய்ப்பைப் பெற்றுத்தரும் ஒன்றாக இருப்பதால் கல்வி தொழிலுடன் தொடுக்கப்பட்டதால் கல்வியின் மேன்மை மங்கியுள்ளது. இதனால் தனியார் கலவி நிலையங்களின் தாக்கம் மேலோங்கி உள்ளது. தனியார் கல்வி நிலையங்கள் இளைஞர்களின் முழுநேரத்தையும் விழுங்கி விடுகிறது.

### இளைஞர்களின் ஆன்மீக ஈடுபாட்டுக்குள்ள தடைகள்


1) புறத்தடை

2) அகத்தடை

***Dr. கணேசமூர்த்தி***
இளைஞர் பிரிவு இணைப்பாளர்
வடபிராந்தியம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்.

### 1. வீட்டில், சூழலில், பெற்றோரிடமிருந்து தடை:

பெற்றோர்களின் தெளிவான சிந்தனையின்மை அறியாமை, இரட்டை வேடம், உலகாயத விருப்பங்கள் என்பன பிள்ளைகளுக்கு உலகாயதக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தூண்டுகின்றன. பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்கள் இளைஞர்களி தவறுக்கு முரண்பாடாக உள்ளன. பெற்றோர் ஒழுக்கம், கட்டுப்பாடு என்ற நிலையில் இளைஞர்களுக்கு தடையாக உள்ளனர்.




### 2. சமூகத்திலிருந்த தடை:

சமூகமும் குடும்பமும் தனிமனித வாழ்வுடன் இறுகப் பிணைக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட வட்டத்தினால் தனிமனித வாழ்வு இணைக்கப்பட்டுள்ளது. இது அழிவுக்குரிய ஒரு வட்டம் இந்த வட்டத்தை உடைக்காவிட்டால் ஆன்மீகம் மிகவும் கஷ்டமான ஒன்றாக இருக்கும். சமூகத்தில் எதிர்பார்ப்புகள், கலாசாரங்கள், மதிப்பீடுகள் பின்வருவனவற்றுக்கு அதிக மதிப்புக் கொடுக்கப் படுகின்றன.

1) பணம் 3) உயர்நிலை
2) பதவி 4) சொத்து
5) அதிகாரம் 6) நண்பர்களின் எண்ணிக்கை

ஆன்மிகம் இந்த மதிப்புகளுக்கு எதிர்மாறானது. பொருட்களால் மனிதனுக்கு மகிமை ஏற்படக்கூடாது. மனிதனால் பொருட்களுக்கு மகிமை ஏற்படவேண்டும். மேலும் சமூகத்திலுள்ளவர்களின் இரட்டை வேடம் (எண்ணம், சொல், செயலில் ஒற்றுமை இல்லாத நிலை) இவை இளைஞர்களின் ஆன்மீக பாதைக்கு தடையாக உள்ளது.

3) சமய மத வெறி

4) சக நண்பர்கள், சக ஊழியர்கள், சகபாடிகள் ஆன்மீகப் பாதையில் செல்வோரை பார்த்து எள்ளி நகையாடுதல்.

5) உலகியலான விஷயங்களில் மட்டுமே சுதந்திரமும், ஆனந்தமும் கிடைக்கும் என்ற ஒரு தப்பபிப்பிராயம்.

6) ஆன்மிகம் ஒரு வறட்சியான செயல் என்ற கருத்து.

ஆன்மீகம் என்றால் கட்டுப்பாடு என்று எண்ணு கிறார்கள். சுதந்திம் என்பதன் உண்மைக் கருத்துப்புரியாமல் கட்டுப்பாடு சுதந்திரத்தைத் தடுக்கிறது என்று எண்ணுகிறார்கள்.

7) ஆன்மிகம் சமயத்திலிருந்து வேறுபட்டது என்று ஒரு நோக்கு

8) ஆன்மிகத்தில் செல்வழிக்கும் நேரத்தில் வேறு வேலைகளில் ஈடுபட்டு (Overtime) தமது செல்வத்தைக் கூட்டலாம் என்ற மற்றவர்களின் ஊக்குவிப்பு.

### *சத்திய சாயி நிலையத்தில் உள்ள தடைகள்:*

1) இளைஞர்கள் புறக்கணிக்கப் படுதல்

2) நிலையங்களில் இளைஞர்களுக்கு பொறுப்புக்களைக் கொடுக்கத் தயக்கம்

3) கிரியைகளுக்கு முக்கியத் துவம் கொடுப்பது.

4) கேள்விகளுக்கு தெளிவான விடை கிடைக்காமை

5) நிலையத்திலுள்ளவர்களின் இரட்டைவேடம்.

6) இளைஞர்களைக்கவரும் நிகழ்சசிகள் இல்லாமை

7) தகவல் பரிமாறல்களில் இடைவெளி, குழப்பம்

8) உள்ளிருக்கும் சிலரின் தவறான செயல்கள்

9) சரியான ஒரு உதாரண மனிதன் இல்லாமை.

### ஆன்மீக நிலையங்களில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைய காரணங்கள்

1) தனியார் கல்வி நிலையங்கள் நேரத்தை விழுங்குதல்

2) வேலை தேடி வெளி மாவட்டங்களுக்கு செல்லல்

3) வெளிநாட்டு மோகம்.

### II. அகத்தடைகள்

1) மனம்: மனம் ஐம்புலன்களினதும் ஆதிக்கத்தில் இருப்பதால் அது ஆன்மீகததுக்கு தடை யாக உள்ளது.

2) ஆன்மீகம் ஒரு கஷ்டமான பாதை (Narrow path) என்ற எண்ணம்

3) ஆன்மீகத்துக்கு நேரம் இல்லை என்ற நினைவு

4) ஆன்மீகம் வாழ்க்கையின் பிற்காலத்தில் கவனிக்கலாம் என்ற எண்ணம்

5) எம்முள் உள்ள காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்யம் என்ற ஆறு எதிரிகளாலும் ஏற்படும் தடை.

இளைஞர்கள் எதிர்நோககும் சவால்களையும், தடைகளையும் அகற்றி ஆன்மீகத்தில் அவர்களை ஈடுபடுத்த என்ன செய்யவேண்டும்.

1) முதலாவதாக இளைஞர்களின் உடல் தேவைகளான உணவு, உடை, தங்குமிடம், ஆரோக்கியம் அடிப்படைக்கல்வி என்பன பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

2) அவர்களின் பாதுகாப்புத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

3) சமூகத்தில் அவர் ஏற்பட வேண்டும்.

4) சாதனைகள் மூலம் சுய கௌரவம் பாதுகாக்கப்பட்டு சுய நோக்கு உருவாக வழி செய்யப்பட வேண்டும். சுயநோக்கு உருவாகும் போது ஆன்மீகத்தில் செய்ய முன்வருவார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)